தென்றல்

வார இதழ்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, ஐப்பசி 28 (14-11-'59). சனிக்கிழமை | இதழ் 22

ஆண்டு நிறைவு

சச்சா நேருவின் பிறந்த நாள் ஊர்வலம் புறப்படுகிறது.

ஊர்வலம் நகர்கிறது. வழியெங்கும் வழி திருப்பும் காட்சிகள். ஆகா, எவ்வளெவ்வளவு இனிய காட்சிகள். எந்தத் தலைமுறையும் காட்டாத- எந்த சர்வாதிகாரியும் காணமுடியாத, இனிய காட்சிகள் அவை.

மனித குல திலகத்தை வரவேற்கவும் வாழ்த்துக் கூறவும் இருமருங்கிலும் எண்ணமுடியா "மக்கள் மந்தை."

ஒருபுறம் "வானைமுட்டும் கமுகும், வயலைத் தழுவும் கால்வாயும், கட்டுக் கலங் காணும் பொன் னுதிர்த்த கழனிகளும், பட்டுத் தோற்கும் சிட்டு மேனிப் பெண்களும திகழ்ந்திருந்த நாடு இது" என்பதைக் காட்டிக்கொள்ளுகின்ற வறுமையின் முத்திரைகள்; அதாவது இந்நாட்டின் நடைப் பிணங்கள்!

அவர்கள் திருவோட்டுக்கும் வழியற்று, இடுகாட்டுக் கபாலங்களைக் கையில் ஏந்தியிருக்கிறார்கள் ஏந்திய கபாலங்களைத் தங்கள் மண்டையில் கொண்டு மோதி, ஆனந்த ஒலி உண்டாக்கி, பெருமானை வரவேற்கின்றனர். இவ்வொலியில் நடனக்காரியின் சதங்கை ஒலி மறைகிறது.

மறுபுறத்தில் சில பிணங்கள் நிற்கின்றன. அவையுள் சிலவற்றின் கையில் பழச்சாறு தரும் வெள்ளிக் கிண்ணங்களைத் தோற்கடிக்கும் நச்சுக்குப்பிகள். வேறு சிலவற்றின் கழுத்தினை, கயிறும் கண்டசரம் இறுகத் தழுவிக்கொண்டிருக்கிறது. மற்றும் சிலவற்றின் கையில் குருதி கொட்டும் குத்துவாள்கள். அவற்றின் முன்னோர்கள் நொடுவாளும் நெடுவேலும் ஏந்தியிருக்கின்றனராம், போர் செய்தற்கு. இன்னும் சில, நனைந்த உடலுடன் நிற்கின்றன. அவற்றின் உடல் உப்பியிருப்பது மகிழ்வால் அல்ல. பண்டைத்தமிழர் புனல் விளையாட்டிற்குத்தான் ஆற்றையும் குளத்தையும் நாடியிருக்கின்றனராம்.

இப்படியாக உள்ள அத்தனை பரிசுகளையும் தமக்குத் தந்துதவிய கருணைமிகு அருளாளராம் "நேரு பெருமான் வாழ்க! வாழ்க!" என மலறுகின்றன, அவை.

ஊர்வலம் மேலும் நகர்கிறது. மகரதோரணங்களின மணத்தில், மனத்தைப் பறி கொடுக்கிறார் பண்டிதர். மகரதோரணங்கள் எவற்றாலானவை - தெரியுமா? வற்றி உலர்ந்த கைகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட நீண்ட எலும்புகளின் வரிசைதான், இந்த மகரதோரணங்கள்.

"பட்டபாட்டிற்குப்பலன் கிடைக்கவில்லையே! கொட்டிய குருதிக்கு நான்கு ஏக்கர் கிடைக்கவில்லை

குரலே வெடியாய் அமைகிறது. அவர்களே தங்கள் கண்ணீரைப் பனிநீராகத் தெளிக்கின்றனர்.

விழிமாரி பொழிகின்றனர் மந்திரிமார்கள், வரிக்கணைகளால் தாம் பிடுங்கிய விழிகளைக் கொண்டு.

"மிஸ்டர் மதரூஸ்", தாம் துறை முகத்தில் பிடுங்கிய ஆறு குடல் மாலைகளையும் கொண்டு வந்து சூட்டி, பண்டிதருடைய இரத்தச் சேவடிகளில் (அதாவது இரத்தம் புட்டதால் செம்மை பொருந்திய அடிகளில்) தன் தலையைப் புதைக் கிறார். பம்பாய்ச் சாரான் மராட்டியர்களின் குருதியால், மாணவர்களின் தோலில் எழுதப்பட்ட பிறந்த நாள் வாழ்த்திழை வாசிக்காமல் அளிக்கிறார். கொய்யப்பட்ட நாகர்களின் தலைகளாம் பூச்செண்டை அசாம் பிரதமர் தருகிறார் மைசூர் முதல்வர் ஜட்டி, ஒரு ஜாக்கெட்டைக் கொணர்ந்து தருகிறார். "இந்த உடை இந்திராவிற்கு ஏற்கும்!" என்று மகிழ்கிறார் மாமா நேரு.

"இவை மட்டுமா?" என்ற பொருளை நேரு தன் பார்வையில் விரித்து நிற்க, "இதோ ஆடல் பாடல் காணீர்!" என்று விலகுகின்றனர்.

74 வயது குமாரி காங்கிரசு "தாம்! தீம்!" என்று இந்திரா தேவியின் நட்டுவாங்கத்துடன் ஆடுகிறாள்.

ஆசியாவின் சோதி சுவைக்கிறார். காங்கிரசின் தீவட்டிகள் மகிழ்கின்றன. "ஆகா! ஆகா! என்னே எருமை?" - தான் தமிழ் கற்பதைக்காட்டிக்கொள்கிறார் நேரு.

அதன் முன்னே தமிழ்நாட்டிலிருந்து தனியாக இதற்கென்றே தம்மைத் தயார் செய்து கொண்டு புறப்பட்ட "மிஸ்டர் மதரூஸ்", காவடியாட்டம் ஆடுகிறார். பதது லட்சம் வேறு "இராமாயணப் பொம்மலாட்டம்" ஆடுகிறார். நேருவின் முகம் தெரிகிறது.

அடுத்து, பந்தும் இந்திராவும் ஒன்று பந்தாட்டம் ஆடுகின்றனர். (மூன்று திட்டங்களையும் வைத்தாடு தலை மூன்று பந்தாட்டம் என்மனார் புலவர்.)

காதினிலே இரசிய ரூபிளாட, காலினிலே அமெரிக்க டாலர் ஒலி சிந்த, இடையில் இங்கிலாந்து பவுன் மேகலையாய் மிளிர, காங்கிரசுக் குமாரி ஆடும் ஆட்டம்தான் "டாப்!" "டாப்!"; மற்றதெல்லாம் "டுப்!" "டுப்!" அந்தக் குமாரியின் தாள்கள் தரையில் பட்டுவிட்டால் கெட்டு விடுமே! அதற்காகவே கான்பூர் போலீசார் எண்ணற்ற மனிதப் புழுக்களின் தோல்களைப் பியத்தெடுத்து வந்து, குரோம்பேட்டையில் பதம் போட்டுத் தயாரித்த அருமையான விரிப்புக்களை விரித்திருக்கின்றனர். தெருவெங்கும் ஒரே நறுமணம்! ஆகா, இந்த வாடையை வேறு இடத்தில் நுகர வேண்டுமானல், கட்டாயம் சுடுகாட்டுக்குத்தான் போக வேண்டும்.

படிப்படியாக ஊர்வலம், கையும் தலையும் போன பாரதமாதா குடிகொண்டிருக்கும் செங்கோட்டையை வந்தடைகிறது. வழியில் காத்திருக்கும் அயல் நாட்டினரையெல்லாம் "சச்சா" நேரு சிரிப்பின் மூலம் கவனித்தருளிச் செல்கிறார்.

அறையினுள் மாமாவும் இந்திராவும் சென்றதும் கதவுகள் மூடிக்கொள்கின்றன,

காத்திருக்கும் வெளிநாட்டுத் தலைவர்கள ஒருவர் பின் ஒருவராகச் சென்று பிறந்த நாள் வாழ்த்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

முதலில் இட்லர் நுழைந்தவாறே பேசுகிறான்.

இட்லர்: நாமெல்லாரும் ஓர் இனம்!

நேரு: யார் சொன்னார்கள்?

சாவு

வாழ்க்கை ஒரு காலகட்டத்தோடு முடிந்து விடுகிறது.
முடியும் இடம் சாவு என்று கூறப்படுகிறது.
எது அந்தச் சாவு?
அது ஓர் உலகமா?
அகண்ட வெளியா?
முன்னலே செத்தவர்களெல்லாம் அங்கே இருப்பார்களா?
என்ன அது?
மூச்சு நின்றுபோகிறது.
உடம்பு எரிக்கப்படுகிறது.
உருவம் மறைந்துவிடுகிறது.
வந்தது தெரிகிறது; போவது எங்கே?
ஏன் வரவேண்டும்? எதற்காகப் போகவேண்டும்?
மனிதன் கண்டுபிடிக்க முடியாமல் இருப்பது இது ஒன்றுதான்.
ஆனல்...
வாழ்வைவிடச் சாவு சுவையானது.
வாழ்வு கண்ணுக்குத் தெரிவதால் வேதனை பிறக்கிறது.
சாவு கண்ணுக்குத் தெரியாததால், அவனவன் மனதுக்கு ஏற்றபடி மாறிக்கொள்கிறது.
வாழ்வு பரபரப்பானது.
சாவு அமைதியானது.
வாழ்வுக்குத் தேவையிருக்கிறது.
சாவுக்கு என்ன தேவை?
நான் பலமுறை இடுகாட்டைப் பார்த்திருக்கிறேன்.
ஏராளமான பேர் புதைந்து கிடக்கும் அந்த மண்மீது வெகுநேரம் நின்றுகொண்டிருந்திருக்கிறேன்.
அங்கே ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளவில்லை.
அதனல் தகராறுகள் இல்லை.
வயிறு புதைந்து கிடக்கிறது.
பசி பறந்துவிட்டது.
நடந்துகொண்டிருந்தமனிதர்கள் தங்கள் எலும்புக் கூடுகளைச் சிதறப் போட்டுவிட்டார்கள்.
அவர்களெல்லாம் யார் யாரோ?
எப்படி வந்தவர்களோ?
எவ்வகையில் முடிந்தவர்களோ?
மெதுவாகக் காது கொடுத்துக் கேட்டேன்.
ஒரு முணு முணுப்பைக்கூடக் காணேம்.
உடம்பிலே கொஞ்சம் காற்று ஓடிக்கொண்டிருந்தபோது, அவர்களிலே ஒருவன் "எனக்குமேல் ஆள் உண்டா?" என்று நிமிர்ந்து நடந்திருப்பான்.
மற்றெருவன் "நான் நினைத்தால் எதுவும் செய்ய முடியும்!" என்று மார்தட்டியிருப்பான்.
பலரை அழவைத்து ஒருவன் சிரித்துக்கொண்டிருந்திருப்பான்.
இருந்ததையெல்லாம் அள்ளிக் கொடுத்துவிட்டு, நெற்றியிலே வள்ளல் என்ற பட்டத்தையும் கையிலே திருவோட்டையும் சுமந்து கொண்டு, தெருத்தெருவாக ஒருவன் திரிந்திருப்பான்.
"அம்மா! பசி!" என்று ஒருவன் அழுதிருப்பான்.
"இந்தா, பிடி!" என்று ஒருவன் கொடுத்திருப்பான்.
எல்லோரும் எந்தக் கேள்வியுமில்லாமல் உறங்கிக் கொண்டிருக்கிருர்கள்.
என்ன இந்த மனிதர்கள்?
சாகப்போவது நிச்சயம் என்பது தெரியாமலே வாழ்கிருர்கள்.
வாழ்வே சாவாக அமைந்துவிடுமானல் எவ்வளவு நன்ருக இருக்கும்?
அடிதடி, பதவிப்போட்டி, விளம்பரம்தேடி அலைவது அனைத்தும் அடங்கிவிடும்.
சாவைவிடச் சிறந்த ஒரு பொதுவுடைமைத் தலைவன் உண்டா?
ஒவ்வொரு உயிரையும் ஒவ்வொரு விதமாக முடிக்கும் சாவைவிடச் சிறந்த கலைஞன் உண்டா?
ஒரு பயனுமில்லாமல் பட்டம் வாங்கிக்கொண்டு போகிருர்களே பலர்...?
பட்டம் கொடுப்பதானல் சாவுக்கல்லவோ கொடுக்கவேண்டும்?
அடக்கமில்லாத மனிதனுக்கும் அடக்கத்தைத் தருவது அது ஒன்றுதானே!
சாவு சமாதிக்குள்ளே பூட்டி வைத்துவிட்ட சிந்தனைகள் எவ்வளவு?
அதிலே நிலையாகக் குடிகொண்டுவிட்ட தத்துவங்கள் எவ்வளவு?
அறிவினல் விளைந்த துன்பங்களை அமைதி கொடுத்துக் களைவதல்லவா சாவு?
அழுதழுது பார்த்துவிட்டோமே - அது எங்கே இருக்கிறதென்று தெரியவில்லையே?
தோன்ருதோன்றித் துறை பல முடிக்கும் அறிவாளர் குழுவில், அதுவும் ஓர் அங்கமா?
எத்தனை கேள்விகளைப் போட்டுவிட்டுத் தான் மட்டும் மறைந்து நிற்கிறது சாவு?
தாயிருக்க மகனைக் கொள்கிறது.
மகனிருக்கத் தாயைக் கொள்கிறது.
செத்த பிணத்தை இடுகாடுவரை தூக்கிச் செல்கிருன், சாக இருக்கும் மனிதன்!
"என்ன இந்த வாழ்வு!" என்கிருன்.
'நாமும் சாகத்தானே போகிறோம்" என்கிருன்.
ஒரு விரக்தி.
ஒரு வைராக்யம்.
அதைத் தொடர்ந்து, அன்பான உள்ளம்.
பயத்தால் பிறந்த இரக்க சிந்தனை.
பிணம் எரிகிறது. வீடு திரும்புகிருன்.
மறுநாள்...
அதற்கும் மறுநாள்...
குணமாறுகிறது.
பிணம் சொன்ன பாடம் மறந்து போகிறது.
பயம் தெளிந்துவிடுகிறது.
சாகவே முடியாத கட்டையைப்போல் பணி தொடர்கிறது.
மீண்டும் ஒரு சாவு.
சிறிது நேர வைராக்யம்.
இதே குணம் எப்போதும் இருக்க வேண்டுமானல்...
தினமும் இடுகாட்டுக்குப் போக வேண்டும்.
சாவைப் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும்.
முடிவு கண்ணுக்குத் தெரிந்து கொண்டேயிருந்தால் வாழ்வு எவ்வளவு தெளிவுள்ளதாக ஆகிவிடுகிறது.
சாவு...
அது ஒரு பேராசிரியன்.
இடுகாடு...
அது ஒரு பள்ளிக்கூடம்.
நான் சாவை நேசிக்கிறேன்.
அது எனக்கு வாழ்வைக் காட்டுகிறது.
நான் சாவைப்பற்றிச் சிந்திக்கிறேன்.
அது சீக்கிரமாக உலகத்தை அனுபவிக்கும்படி என்னைத் தூண்டுகிறது.
சாவு வருவதுபோலக் காண்கிறேன்.
தலைமுறைக்குப் பொருள் சேர்த்துவிடும்படி, அது என்னை அவசரப்படுத்துகிறது.
சாவை நான் புரிந்துகொண்டு விட்டேன்.
அதனல் என் வாழ்வு தெளிவாகிவிட்டது.
நான் செத்தாகவே முடிவு கட்டிக்கொண்டு விட்டேன்.
அதனல் வாழ்வதாக நினைத்துக்கொண்டிருப்பவர்களைப் பார்க்கும்போது எனக்குச் சிரிப்பு வருகிறது.
எல்லோரும் வரிசையாகச் சாவார்கள்.
அவர்களை நான் பார்த்துக்கொண்டே இருப்பேன்.
அவர்களைப்பற்றி நான் பாட்டெழுதுவேன்.
நான் மட்டும் இனிச் சாகவேமாட்டேன்!
நான்தான் ஏற்கனவே செத்துவிட்டேனே!
செத்தவன் எதற்காகப் பயப்பட வேண்டும்?
வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டே இருப்பேன்.
எப்போதாவது என் பெயரைச் சொல்லி, நான் செத்துவிட்டதாக யாராவது சொன்னல், அவர்களுக்கு நீங்கள் சொல்ல வேண்டியது இதுதான்: **"அவன் ஏற்கனவே செத்துவிட்டான்; இப்போது செத்தது அவன் உடம்புதான்!"**

கண்ணதாசன்

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 6 | 14–11–'59 | இதழ் 22

இனிப் பஞ்சமில்லை; சோறற்ற அபலையில்லை.

"நெல் காய்க்கும் மரம் பார்த்தேன்! அது உயரமாயுமில்லை; குட்டையாயுமில்லை.

அப்பாடா, ஒரே மரத்தில் எத்தனை மணிகள்?

அதற்குத் தண்ணீரும் பாய்ச்சுகிறார்கள். கிடைக்காதபோது உழவர்கள் தங்கள் கண்ணீர் எனப்படுவதையும் பாய்ச்சுகிறார்கள்.

இன்னொரு வேடிக்கை!

அவர்கள் அந்த நெல் மரத்தை அடியோடு அறுத்துக்கொண்டு வந்து ஓங்கி ஓங்கி அடிக்கிறார்கள்.

அப்பாடா, நெல் தனியே வந்துவிடுகிறது.

விந்தையாக இருக்கிறது.

எப்படி இந்த மனிதர்கள் இந்த மரத்தை இங்கே கொண்டு வந்தார்கள்?"

★

'என்ன சுவாமிகளே, அன்னபானாதிகள் ஆயிற்றா?"

"காலையில் சீனுதானு சத்திரத்தில் பொங்கல் அருளினர்"

"மதியத்திற்கென்னவோ?"

"பச்சையப்பர் கட்டளை இருக்கவே இருக்கிறது, சுவாமிகளே!"

"இந்தக் கட்டளையை, சிவானந்த முதலியாரவாள் வரச் சொல்லியிருக்கிறார்கள்"

"ஏதோ சுவாமிகளே, மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றாமல் போகப் போவதில்லை!"

★

இப்படி இரண்டு வித மனிதர் கூட்டமும் இந்த உலகில்தான் உலவுகின்றன.

ஒன்று, உழவைப்பற்றி ஒன்றுமே அறியாத கூட்டம்.

மற்றது, மடத்துப் பட்டைச் சோறைத்தவிர வேறறியாக் கூட்டம்.

ஒன்று, வாழ்வின் உச்சாணிக்கொப்பு.

மற்றது, பொறுப்பை மறந்தது. இரண்டுக்கும் இடையே மற்றொரு கூட்டம்.

அந்தக் கூட்டம்தான் பட்டினிப் படை!

உழைத்தும் உணவில்லை.

கண்ணீர் சிந்தியும் பலன் காணாக் கூட்டம் அது.

வைகறையில் கலப்பை பிடிப்பவர், அல்லில்தான் தூங்குகின்றனர். காலையில் மலையடிவாரம் செல்வோர், மாலையில்தான் "இல்லம்" திரும்புகின்றனர், கல்லோடு தம் இதயத்தையும் உடைத்துக்கொண்டு. காலக் கணக்கற்று பொறியின்முன் நிற்பவன், காலிற்று விழும்போது திரும்புகிறான்.

எவனும் உழைக்க மறுக்கவில்லை. ஒவ்வொருவனும் தன்னாற்றலுக்கு மீறி உழைக்கிறான்.

"அணைக்கட்டுக்கள் ஆயிரம் எழுவது காணீர்!

அலை சுழித்தோடும் ஆறுகளையும் ஓடைகளையும் காணீர்!

வெற்றிச் சிரிப்புச் சிரிக்கும் முற்றிய கதிர்மணிகளைப் பாரீர்!

ஆண்டுக்காண்டு அறுவடை உயர்கிறது. வேளாண்மைக்கு வேளாண்மை விளைச்சல் பெருகுகிறது.

இனிப் பஞ்சமில்லை; இல்லை என்ற அச்சமில்லை!

இனிக் கவலையில்லை; சோறற்ற அபலையில்லை."

—அமைச்சர் பெருமக்களின் ஆரவாரம் இப்படியிருக்கிறது.

வணிகர்கள் ஒருபுறம் விலை எப்படியோ ஏறிவிட்டதென்கின்றனர்.

வேண்டிய அளவு விளைந்தால் விலைவாசி குறையும் என்றும் சொல்கின்றனர்.

ஏழை நாளெலாம் உழைத்தும் தன் வருவாயைக்கொண்டு உணவுப் பொருள்களை வேண்டிய அளவு வாங்கமுடியவில்லை.

அமைச்சரோ, "எடுத்து வைக்கமுடியாத அளவுக்கு அறுத்து வைத்திருக்கின்றனர் உழவர்!" என்கின்றார்.

அளவுக்குமேல் விளைச்சல் என்றால் கிட்டா நிலையும் எட்டா விலையும் வளர்வதேன்?

யாரேனும் பதுக்குகின்றனரா?

நமக்குத் தேவையானதை நாம் வெளி மாநிலங்களிலிருந்து பெறமுடியவில்லையா?

நம் தஞ்சை நெல் எங்கே போகிறது?

யார் மேல் குற்றம்? எங்கிருக்கிறது தவறு? தட்டிக் கேட்க நமக்கு உரிமையில்லையா? ஊருக்குழைக்கும் எல்லாருக்கும் இந்த உரிமை உண்டு. நாமும் கேட்டோம்! நாட்டிலுள்ள அனைவரும் கேட்டனர்! எழுந்த வினாக்கள் அளித்த பதில்களிவை.

"தில்லி அரசு வேண்டிய மாநிலங்களுக்கு மட்டுமே, மிகுந்த உணவுப் பொருட்களைத் தந்துதவுகிறது.

பிற மாநிலங்களில் உணவுப் பொருள்களை விரைவாக எடுத்துச்செல்ல வேண்டிய வசதிகளையும் செய்து தருவதில்லை.

'இந்த முறை நன்று! அந்த முறைதான் சிறந்தது!" என்று ஒழுங்கான முறைகளையும் பாழாக்கி, ஒன்றும் இல்லாமல் ஆக்குகின்றனர்.

"நிலைமை மோசமான பின்னும்கூட, நாட்டின் உணவு நிலைபற்றிக் கவலைப்படத் தேவையில்லை!" என்று வேறு பேசுகின்றனர் அமைச்சர்கள்.

'பொருள்களைப் பதுக்கி விலையைப் பெருக்கிக் கொள்ளையடிப்போரால்தான் இத்தனைத் தொல்லைகளும். அதை மறைக்கவே-அவர்களின் தயவால் தாம் வாழ்வதை மறைக்கவே-அமைச்சர்கள் பழியைத் திசை திருப்புகின்றனர் என்றெண்ணவும் இடமிருக்கிறது. இத்துணை நிலைகளையும் கண்ட பின்னர்தான் நாட்டின் நலனிலே அக்கரைகொண்ட அத்துணை பேரும் புது வழி கண்டிருக்கின்றனர்.

சென்னை மாநிலத்தின் எதிர்க்கட்சியினரெல்லாம் கூடி, அணி ஒன்று கண்டிருக்கின்றனர்.

தமிழகப் பொதுவுடைமையர், தமிழக சோசலிஸ்ட்கள். தமிழக பிரசா சோசலிஸ்ட்கள், தமிழரசுக் கழகத்தினர், தொழிற்சங்கச் சார்பாளர்கள் ஆகியோரோடு திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் சேர்ந்து ஒரே குரல் எழுப்புகின்றனர்.

வங்கத்தில் சொல்லியதுபோல் இது ஒரு தனிப்பட்ட இயக்கத்தின் பதவிக்கான போராட்டம் என்று இங்கும் வீண் பழி கூறமுடியாது.

இது தமிழகத்தின் எல்லா இயக்கத்தினரும் சேர்ந்து எழுப்பும் மொத்தக் குரல்! நலிவோரின் குரல்! எழுவோரின குரல்! ஊழலை எதிர்ப்போரின் குரல்! பதுக்கலைக் கண்டிப்போரின் குரல்!

யாரோ ஓர் அமைச்சர் கிளர்ச்சிகளால் இதைச் செய்துவிடமுடியாது என்றாராம்.

அந்த அமைச்சர் முன்பு "தமிழ்நாடு" பெயர் வைப்புக் கிளர்ச்சியையும், பதிவுபெறாத ஊழியர்களின் குரலையும், உழவர்கள் உரிமைப் பிரச்னையையும், இப்படியே பேசிப் பின் எப்படியானார் என்பதை அறிவோம்.

நாளை முதல் 22-ம் நாள்வரையும் அனைத்து இயக்கத்தினரும் ஒருசேரக் கிளப்பும் குரலுக்கு அமைச்சர் எப்படிப் பணிவார் என்பதை நாமறிவோம்; நாடுமறியத்தான் போகிறது!

கழகத்தவரே! தமிழ் உலகத்தவரே! ஒன்றுபட்டெழுவீர்! பகையை இழித்தெழுவீர்! பதுக்கலை அழித்தொழிப்பீர்! விலை உயர்வைத் தகர்த்தழிப்பீர்! ஒன்றுபட்ட சக்தியை வென்றுவிடமுடியாது, என்றும்; எவராலும்

—இந்த உண்மையை நாட்டிடுவீர்! நம் திறமையைக் காட்டிடுவீர்! காட்டிடுவீர்!

★

விலைவாசிக் குறைப்பு-சர்வகட்சிக் குழு.

தி. மு. கழகக் கிளைகளுக்கு அறிவிப்பு:

ஏழை-நடுத்தர வகுப்பு மக்களைப் பாதிக்கின்ற வகையில் உணவுப் பொருள்களின் விலைகள் ஏறியிருப்பதைக் கண்டிக்கவும், விலைகளை நியாயமான அளவுக்குக் குறைக்குமாறு அரசியலாருக்கு வற்புறுத்திக் கூறவும் விலைவாசிகள் குறைப்பு சர்வகட்சிக் குழு ஒன்று சென்னையில் அமைந்திருப்பதை அனைவரும் அறிவீர்கள்.

நவம்பர் 15-ஆம் நாள் முதல் 22-ம் நாள் வரையுள்ள நாட்களில் கண்டன ஊர்வலங்கள் நடத்தியும், பொதுக் கூட்டங்கள் கூட்டியும் விலைவாசிகளைக் குறைக்க அரசியலார் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வற்புறுத்தவேண்டும் என்று சர்வகட்சிக் குழு முடிவு செய்திருக்கிறது.

எனவே, மாநில அளவில் அமைந்துள்ள இந்த அமைப்பின் தொடர்பாக அந்தந்த மாவட்ட அளவில் குழுக்கள் அமைப்பதற்கு எடுத்துக்கொள்ளும் முயற்சிகளில், அந்தந்த மாவட்ட தி. மு. கழகச் செயலாளர்களும் தங்கள் தங்கள் ஒத்துழைப்புகளை அளிக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

கிளைக் கழகங்களைப் பொறுத்தவரையில் விலைவாசிக் குறைப்பு வாரத்தில் ஆங்காங்கு நடைபெறும் ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் ஆகியவற்றில் கலந்துகொண்டு ஒத்துழைக்குமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

'அறிவகம்', சென்னை-13. 8—11—'59.

என். வி. நடராசன்.
துணைப்பொதுச்செயலாளர் தி. மு. க.

பழம்பாடல் வரிகளை எடுத்தாள்வது தவறு?

— முன் இதழ்த் தொடர்ச்சி —

"தொக்கிள மலர்துதை
விலாதசோலையும்
புக்கிளந் தாமரை
நகாத பொய்கையும்
மிக்கிளம் பிறைவிசும்
பிலாத அந்தியும்
மக்களை யில்லதோர்
மனையும் ஒக்குமால் !"

என்று சூளாமணி பாடுகின்றது. வளையாபதியோ,

"பொறையிலா அறிவு, போகப்
புணர்விலா இளமை, மேவத்
துறையிலா வனச வாவி,
துகிலிலாக் கோலத் தூய்மை,
நறையிலா மாலை, கல்வி
நலமிலாப் புலமை, நன்னர்ச்
சிறையிலா நகரம் போலும்
சேயிலாச் செல்வ மன்றே !"

என்று சொல்கின்றது. கந்த புராணமும்,

"கல்லா மழலைக் கனியூறல்
கலந்து கொஞ்சும்
சொல்லால் உருக்கி அழுதோடித்
தொடர்ந்து பற்றி
மல்லார் புயத்தில் விளையாடு
மகிழ்ச்சி மைந்தர்
இல்லா தவர்க்கு மனைவாழ்வின்
இனிமை என்னம் ?"

என்ற கேள்வியே கேட்கின்றது. மற்றொரு புராணமும் இதையே சொல்லும்.

"கண்ணில் யாக்கையும்
திங்களில் கங்குலும்
கண்போல்
அண்ணல் மந்திரி
யில்லர சாட்சியும்
அருளில்
திண்ணென் நெஞ்சமும்
புலவரில் அவையும்
ஒண்திம்பால்
வண்ண வாயின
மக்களில் வாழ்வும்
ஒப்பாமால் !"

—இதுதான் சீகாளத்திப் புராணம்.

"விரிகடல் அமிழ்தமும்
வேலை ஞாலமும்
செருமுகத் தழலுமிழ்
சிறுகண் யானையும்
எரிமணிக் குப்பையும்
எளிதின் எய்தலாம்
அருமகப் பெறுதல்மற்
றரிய தென்பவே:"

என்னும் இது நைடதம்.

ஒருசேரப் புலவர் பெருமக்கள் எல்லோரும் இதையே வலியுறுத்துகின்றனர். இவ்வாறே பிறநாட்டுப் புலவரும் ஒப்புகின்றனர் - ஒருப்படுகின்றனர்.

தொடரும் வாழ்வில் நாகாத்தலைச் சிறந்ததாகக் குறள் (127) குறிப்பதைப் போலவே "காக்கப்படுவன இந்திரியம் ஐந்தினும், நாக்கல்ல தில்லை நனிவெல்லுமாறே" என்று வளையாபதியும் வற்புறுத்தும்.

இதுவரையிலும் தமிழிலக்கியங்களுக்குள்ளேயே ஒற்றுமைகளைக் கண்டுகொண்டிருந்த நாம், இனி ஆங்கிலக் கருத்தொற்றுமையையும் வரலாற்று ஒற்றுமையையும் காணவேண்டி உயர்வட்டம் ஒன்று போடுவோம். இதில் முதல் பேச்சே சாவைப் பற்றித்தான். சாவைப்பற்றி என்றதும் வியப்போ திகிலோ வேண்டாம், புலம்பும் செல்வருக்கு.

சாவைப்பற்றி நன்கறிந்தவர்கள் நாங்கள். இன்றைய விடுதலை விரும்பிகளின் பட்டியலிலே இடம் பெறுகின்ற நாங்கள் மட்டுமல்ல; எங்களுக்கு முன்னிருந்த உரிமை வீரர்களும் சாவைப்பற்றிக் கவலைப் பட்டதில்லை; அதை எண்ணிக் கலங்கியதில்லை. புலம்பும் செல்வரே, வருக! நீரும் என் பக்கத்தில் சில நாள் நில்லும். உம் மீசை குத்திட்டு நிற்கும். (உத்திரவாதம் இல்லை. ஏனென்றால் அதற்கு உயிரே கிடையாதே) இனி உம்மையும் சேர்த்துக் கொண்டு பேசுகிறேன்.

அந்த உரிமை வீரர்களுக்கும் எங்களுக்கும்-மன்னிக்க, நமக்கும் சாவு என்பது தூங்குவதுபோல, சர்வ சாதாரணமானஒரு நிகழ்ச்சி. இதனால் தான் திருக்குறளிலே "உறங்குவது போலும் சாக்காடு" என்று சொல்லிச் சென்றான் நம்முன்னோன். இதையே மணிமேகலை

'பிறந்தவர் சாதலும்
இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும்
போன்ற துண்மையின்'

என்று கூறுகின்றது இவற்றையெல்லாம் கடந்து மேலேயே சென்று விடுகின்றது வளையாபதி. சாவு என்றதும் சஞ்சலப்பட்டு ஓலமிட்டு ஓவெனக் கதறி அழுவோரைப் பார்த்து வளையாபதி உரத்த குரலெழுப்பி வினவுகின்றது.

'நாளுநாள் சாகின் றேமால்
நமக்குநாம் அழாத தென்னே ?"

உறக்கத்தை இறப்பென்கிறது வளையாபதி. போதாததற்கு ஷெல்லி- அவனும் இதையே, இப்படியேதான் குறிக்கின்றான். எனில் இவர்கள் எல்லோருக்கும் எப்படி அமைந்தது இந்தக் கருத்து. ஒருவேளை "காப்பி" அடித்திருப்பார்களோ? 'புலம்பும் செல்வரின்' மரமண்டையில் இப்படித்தான் கேள்வி எழுகின்றது. அப்படியல்ல; அப்படியல்ல! உலகமே ஒத்துக் கொள்ளும் உண்மை ஒன்றையே, அவரவர் தத்தம் தாய் மொழியிலே சிந்தித்து எழுதி வைக்கின்றனர். அனைத்தையும் ஒரு சேரக் காணும் போது இந்த ஒற்றுமை புலப்படுகின்றது. இது 'காப்பி' அடித்தல் அல்ல. நம்மைப்போலவே பிறன் சிந்திக்ககூடாது என்று சட்டம் ஒன்றுமில்லையே; எப்படியோ சிந்தனைகள் ஒரு முனையைத் தொடுகின்றன. பட்டதை எழுதுகின்றன. பின்னர் வியக்கத்தக்க ஒற்றுமையொடு காணப்படுகின்றன. இதை விட்டு வீணான குதர்க்கமும் விபரீத நோக்கும் கொண்டு மரமண்டையைக் குழப்பிக்கொள்ள வேண்டாமே.

தமிழ் இலக்கியங்களிலே குரவையாடுதல் என்றொரு பகுதியுண்டு. முன்தேர்க்குரவை என்றும் பின் தேர்க்குரவை என்றும் இரண்டுவகை உண்டு. இவற்றைத் துறைகள் என்று கூறும் இலக்கணங்கள். தொல்காப்பியத்திலும் புறப்பொருள் வெண்பா மாலையிலும் இவற்றைப் பற்றிய செய்திகளைக் காணலாம்.

குரவையாடுதல், ஆண்களும் பெண்களும் கைகோத்தாடுதல். வெற்றிபெற்று மீளும் மன்னனின் தேர் முன்னும் பின்னும் இந்த ஆட்டம் ஆடப்பெறும்.

இதே வகையான குரவையாடலைக் கிரேக்க நாட்டிலும் வெற்றிபெற்ற மன்னனுக்கு முன்னே மக்கள் ஆடி வந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. இலக்கியங்களும் மெய்ப்பிக்கின்றன. தமிழகத்துக்கே உரியது என்று கருதப்பட்ட இது கிரேக்க நாட்டிலும் உண்டு என்பது தெரியவந்தபின்னர், இங்கு மட்டுமல்ல-எங்குமே சில நிகழ்ச்சிகள் - பழக்க வழக்கங்கள் ஒரே படித்தாகவே இருக்கின்றன என்பது உறுதியாயிற்று. உணர்ச்சிக்கு அடிப்படை என்று எவை கருதப்படுகின்றனவோ அவ்வவற்றிலெல்லாம் மக்கள் - எல்லா நாட்டு மக்களும் ஒரேமாதிரியாகத்தான் நடந்துகொள்கிறார்கள் என்பது பெறப்படுகின்றது. எந்தக் காலத்திலும் இந்தப் 'பழக்கம்' - இயற்கை விதி இருந்தே வந்தது - வரும் என்பதை நாம் அறியலாம்.

அன்று, வென்ற படை வீரர்கள் கையிலே வேலையும் வாளையும் ஏந்தி ஆடிய ஆட்டத்திற்கும்; இன்று, வெற்றிபெறும் 'ஆக்கி' விளையாட்டுக்காரர்கள் வெற்றிபெற்றவுடனேயே தங்கள் தங்கள் 'ஆக்கி' மட்டைகளை விண்ணிலே வீசியெறிந்து தாவிப் பிடித்து களிக் கூச்சல் இட்டுக் குதிக்கின்ற குதிப்புக்கும் இடையே என்ன வேற்றுமை இருக்கின்றது ?

அன்று அவர்கள் வேலேந்தி வாளேந்தி ஆடினார்கள்; இன்று இவர்கள் ஆக்கி மட்டைகளைக் கையிலேந்தி ஆடுகின்றார்கள். மற்றபடி அனைத்தையும் இங்கே இப்பொழுதும் காணலாம்.

பழந்தமிழரும், கிரேக்க மக்களும், இன்றைய நம் விளையாட்டு வீரர்களும் ஒருவரைப் பார்த்து ஒருவர் 'காப்பி'யா அடித்தார்கள்? உணர்ச்சி வசப்பட்டு அவர்கள் அவ்வாறு ஆடுகிறார்கள்; குதிக்கிறார்கள். வெற்றிக்களிப்பில் குதிக்கும் ஒருவரிடம் சென்று, நீ காப்பியடித்து ஆடுகிறாய், குதிக்கிறாய் என்று சொல்லட்டும், இந்தப் புலம்பும் செல்வர். புலம்பும் செல்வரின் மரமண்டை கலங்கும்படி அடித்து அனுப்புவர் அந்த விளையாட்டு வீரர். உணர்வு தானே வையத்தையே ஆட்டிப் படைக்கின்றது.

துவளும் மீசைகளை நினைத்ததும், வேறொன்று நினைவிற்கு வருகின்றது. அறிவுகெட்டுப் போனவர்களைத் தூற்றுவதற்கென்றே தமிழில் தனியொரு வகையுண்டு. வசை புராணம் 'பாடுதல்' என்று அதை அழகாகச் சொல்வார்கள். இலக்கியத்தின்படிச் சொல்ல வேண்டுமென்றால் தமக்குப் பிடிக்காதவர்களிடத்தே மட்டமான- தரக்குறைவான - இழிவுபடுத்தும் நோக்கத்தோடு சிலவற்றைத் தூதாகவே அனுப்புகின்ற அது, 'தூது'வகை எனப்பெறும். சிறு பிரபந்த வகைகளிலே இதுவும் ஒன்று என்று இலக்கணம் சொல்லும். இந்த வகையிலே விடப்படுகின்ற தூதுப் பொருள் கழுதையாகவோ செருப்பாகவோ தான் இருக்கும். அவனமானப்படுத்த வேண்டும் என்றும் எண்ணத்தோடு இன்னும் மோசமானவற்றையும் கூடத் தூது அனுப்புவார்கள். இவற்றிற்குக் "கழுதைவிடு தூது" என்றோ "செருப்புவிடு தூது" என்றோ பெயரைச் சூட்டி அனுப்புவார்கள்-அல்லது ஊரார் அனைவர்க்கும் தெரியப் பரப்புவார்கள். இதுதான் வசை வகை.

இத்தகைய வசை புராணம் பாடும் முறை தமிழிலே மட்டும் அல்ல; வேறு மொழிகளிலும் இருக்கத்தான் செய்கிறது. வசைப் பாட்டொன்றையும், அதைப் பாடியவர் ஒருவரையும் குறித்து, இச்செய்தியை முடித்துக் கொள்ளுவேன்.

DUNCIAD—
A Literary Satire—
By ALEXANDER POPE.

Satire - வசை. அலெக்சாண்டர் போப்பென்பார் பாடியது இது. விளக்கத்தைக் கேட்டுணர்க.

மற்றொரு குறிப்பு. தமிழகத்திலே கொண்டி மகளிர் என்பார் இருந்தனர். இவர்கள், தோற்ற அரசர்களின் மனைவியராய், மக்களாய், உறவினராய் இருந்து வென்ற அரசனால் சிறையெடுக்கப்பட்டவர்கள். இவர்களை ஆண்கள் நெருங்க மாட்டார்கள்; இவர்களின் அழகின் கவர்ச்சியிலே ஈடுபட்டாரும் நாட்டில் பழிக்கப்பட்டனர்! இந்த மகளிரே பிற்காலத்தில் பரத்தையர் என்றழைக்கப்பட்டனர் என்பது வரலாறு.

இக்கொண்டி மகளிரைப் பற்றி அகம்புறம் அனைத்துமே குறிக்கின்றன. மொகலாயப் பெருமன்னன் அக்பரின் ஆட்சியிலேயும் இத்தகைய மகளிர் இருந்ததாக வரலாறுகள் குறிக்கின்றன. Harem (ஏரம்) என்ற சொல்லை அன்பர்களின் சிந்தனைக்கு வைக்கின்றேன்.

தமிழகத்திலும் மொகலாயப் பேரரசிலும் வம்பப் பெண்கள் இருந்தனர் என்னும் ஒன்றிய செய்தியறிகின்றோம்.

கம்பனின்முன் ஒருநாள் பொன்னைப் பற்றிய சிந்தனை, இதழ் விரித்தது. பெண்ணைப் பற்றியே எண்ணும் எண்ணம் அன்று பொன்னைப் பற்றி எண்ணத் திரும்பிய காரணத்தினால் தான் போலும், நமக்கு அரிய ஒரு குறிப்பு கிடைக்கிறது.

பொன்னின் மதிப்பு, அதில் ஆக்கப்படும் அணிகள், அவை அணியப்படும் இடங்கள், அணிகளின் விலை, அவற்றால் மக்கள் பெறும் உயர்வு, பெருமைக்கு அதன் தேவை இன்றியமையாமைபற்றியெல்லாம் விரிவாக,

— 6 ம் பக்கம் —

புலவர் துரைமோகனன், வேலூர்.

முகவரி மாற்றம்

கி. சோழன்,
c/o டாக்டர் ஜி. எப். லூயிஸ்,
122, சிக்பசார் வீதி,
பெங்களூர் - 1.

பண்டைத் திராவிடம்

ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை.

பா. இளவழகன்

கடந்த இதழில் பண்டைத் திராவிடத்தின் ஒரு பகுதியைக் காட்டியிருந்தார் கட்டுரையாசிரியர். இவ்விதழில், அத்திராவிட மரபுகளையும் சிந்தனைகளையும் ஆரியர் எப்படித் தமதாக்கிக்கொண்டனர் என்பது கூறிக் கட்டுரையை முடிக்கின்றார், கட்டுரையாசிரியர்.

உலோக காலத்தில் தென்னவர் வேளாண்மையில் பெரிதும் ஈடுபட்டனர். உலோகக் கருவிகள் அவர்கட்கு இத்துறையில் பெரிதும் பயன்பட்டன. தென்னவர் அரிசி விளைச்சலில் பெரிதும் முனைந்து ஏற்றுமதி செய்யும் அளவிற்கு விளைவைப் பெருக்கினர். அதே சமயத்தில் சிந்து சமவெளியில் வாழ்ந்த திராவிடரோ, அங்கிருந்த வெப்பதட்ப நிலைக்கேற்ப, கோதுமை விளைச்சலில் பெரிதும் வெற்றி கண்டனர். அதே நேரத்தில் தென்னவரில் ஒரு பிரிவினர், பசுக்களையும், மாடுகளையும் பேணி வளர்த்து வந்தனர். தென்னவர் காளைகளைப் போற்றினர் என்ற செய்தியை, இலிங்கத்திற்கு முன்னர் வரையப்பட்டிருந்த காளையினின்றே நாம் தெளிவாக்கிக்கொள்ளலாம். இத்தகைய கால்நடைப் பண்ணைத்துறையில் ஈடுபட்டிருந்தவர்கள் மாயோன் என்ற தெய்வத்தை வழிபட்டதாகத் தொல்காப்பியத்தினின்று புலனாகின்றது. மாயோன் எனில் கரியவன் என்பது பொருளாகும். - மாமை என்பது கருமையைக் குறிக்கும். இந்தியாவில் குடியேற வந்த ஆரியர்களுக்குக் கரியவர்கள் சிலர் பெரும் பகைவர்களாக இருந்தனர் என்பது இருக்கு வேதத்தினின்று தெளிவாகிறது. (இருக்கு வேதம்-எட்டாவது மண்டலம்-96-வதுசூக்தம்-13-15) கிருட்ணர்கள் (கரியவர்கள்) என்ற ஓர் இனம் இருந்ததாகவும், அவர்களே தேவக் கடவுளான இந்திரனுக்குப் பகைவர் என்றும்; பல கிருட்ணர்களை மருத், பிரகஸ்பதி என்ற தன் இரு புரோகிதர்களைக் கொண்டு அழித்தான் இந்திரன் என்றும் அப்பகுதியில் காணப்படுகிறது. அந்தப் பகை இனத்தின் தலைவன் (கிருட் ணன் - கரியவன்) என்றே அழைக்கப்பட்டுள்ளான். இந்தக் கிருட் ணன் முல்லை நில மக்களின் மாயோனே ஆவான் என்று தீட்சதர் அவர்கள் (Pre-Historic South India Pp. 101) குறிப்பிடுகின்றார். இதற்கொத்த கருத்தினையே, சென்னை பல்கலைக்கழகத்திலிருந்த மற்றொரு வரலாற்றுப் பேராசிரியர் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியும் (Illustrated Weekly) என்ற பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் (The Bhakti Cult) எழுதியுள்ளார்.★ இவற்றிலிருந்து திராவிடர்களில் ஒரு பிரிவினரின் தலைவனே கிருட்ணன் என்பதும் அவன் ஆரியர்களுக்குப் பெரும் பகைவனாக இருந்தனன் என்பதும் தெளிவாகும். பின்னர் ஆரியர்கள் தங்களுக்கே உரிய முறையில் அவனையும் தம் தெய்வப் பட்டியலுக்குள் சேர்த்துக்கொண்டு மகாபாரதத்திலும் அவனைப்பற்றிப் பலவகையான கதைகளைப் புனைந்து உரைக்கலாயினர். இதே கிருட்ணன்தான், வேத வணக்கத்துக்குரிய விட்ணுவின் அவதாரம் என்றும் ஆக்கப்பட்டான்.

கிருட்ணனின் உண்மைத் தோற்றத்தையும், மாயோனுக்கும் கிருட்ணனுக்கும் இடையேயுள்ள தொடர்பை ஈண்டு நான் விளக்குதற்குரிய காரணம், கிருட்ண வழிபாட்டை மேலும் பெருக்க வேண்டும், கிருட் ண லீலைகளைப்பற்றிப் புதுப் புது விளக்கங்கள் காண வேண்டும் என்ற எண்ணத்தினாலல்ல; மாறாக, உண்மைகள் எவ்வாறு இதுகாறும் அழிக்கப்பட்டும், மறைக்கப்பட்டும் வந்தன என்று விளக்குவதற்காகத்தான். இந்து சமயத்தின் இருபெரும் கடவுள்கள் என்று போற்றப்படுகின்ற சிவனும் கிருட் ணனுமே, ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்த பிறகு இங்கிருந்த பழங்குடி மக்களிடத்தினின்று கடன் வாங்கிய தெய்வங்களே ஆகும். ஆனால் ஒரே ஒரு மாற்றம் அதற்கு முன்னர் இவ்விரு தெய்வங்களும் எளிய மனமுடைய மக்களின் அன்பு வழிபாட்டிற்குரியனவாக இருந்தன. பின்னர் வந்தவர்களே அவ்விரு தெய்வங்களைப்பற்றிப் பல ஆயிரக் கணக்கான கதைகளையும், புராணங்களையும் புனைந்துரைத்து, வழிபாட்டு முறையையே மாற்றியதுடன், சமயத் துறையில் வெறியுணர்ச்சியையும், ஆடு, மாடு முதலிய உயிர்களைப் பலியிடுகின்ற அளவிற்கு சமயத்தைக் கீழான நிலைக்குக் கொண்டுவிட்டனர். வரலாற்றுக்குட்பட்ட காலத்திலேயே, இந்து சமயத்தையும், அதன் பலியிடும் தவறான பழக்கங்களையும் எதிர்த்துப் பிரசாரம் செய்த புத்தரையே, அவர்கள் இந்து சமயக் கடவுளான விட்ணுவின் அவதாரம் என்று கூறிக்கொண்டு வரும் பழக்கம் நாமெல்லாம் அறிந்ததே ஆகும். அதுதான் ஆரியர்கள் தேர்ந்தெடுத்த குறுக்கு வழியாகும். எந்த ஒன்றை எதிர்த்து வெற்றி காண முடியவில்லையோ அதைத் தமதாக்கிக் கொள்வது ஆரியர் தொழில். அது போன்றேதான், எந்தத் திராவிடரை அவர்கள் போர்க்களத்தில் முறியடிக்க முடியவில்லையோ அவர்களுடன் கொஞ்சிக் குலவிக்கொண்டு, அவர்களுடைய கடவுளரையும் ஏற்றுக்கொண்டு, அதற்கெனப் புராணங்கள் வரைந்து அவர்களைத் தம்மவராக்கிக் கொண்டனர். பின்னர்த் தம் கடவுளர் என்றுஉலகுக்குப் பறைசாற்றவும் தொடங்கிவிட்டனர்.

இதுபோன்றே அவர்கள் காலத்தில் இருந்த திராவிடர்களின் பண்பாட்டு நுணுக்கங்கள் எல்லாவற்றையும் நன்குணர்ந்து, திராவிடரின் கலைகளையும், கலைநூல்களையும் நன்கு பயின்று அவற்றை சமஸ்கிருதத்தில் மொழிபெயர்த்துத் தம்முடைய சொந்தக் கலைகளாகவே ஆக்கிக் கொண்டனர். எடுத்துக்காட்டாக, பேராசிரியர் பூரணலிங்கம் பிள்ளையவர்கள், "தமிழிலக்கிய வரலாறு" என்ற தம்நூலில் ஆரியர்கள் எப்படித் திராவிடரின் சித்த வைத்தியத்தைப் பயின்று, அதை ஆயுர்வேதமென வடித்துத் தந்து, பின்னர் ஆயுர்வேதத்தினின்று தான் சித்தவைத்தியம் தோன்றி வளர்ந்தது, தமக்கு முன்னர் திராவிடர்க்கு வைத்திய முறையே தெரியாது என்று ஏமாற்றியுள்ளதைத் தெளிவாக விளக்கியுள்ளார் (History of Tamil Literature-M. S. Purnalingam Pillai Pp. 265-266) வைத்யரத்ன பண்டிதர் டி. கோபாலாச்சாரியரும் இதே கருத்தை அறிவித்திருப்பது உன்னத் தக்கது. இந்தக் கதி சித்தவைத்தியத்திற்கு மட்டுமல்ல; திராவிடரின் பழம் பெருங்கலைகள் அத்தனைக்குமே ஏற்பட்டுவிட்டது. கடவுளரையே ஏற்றுக்கொண்டு தமதாக்கிக்கொண்டவர்கள் வேறு எதைத்தான் செய்யமாட்டார்கள். அதே முறையில்தான் திராவிடரின் தனிப்பெரும் சொத்துக்களான தொல்காப்பியம், திருக்குறள் ஆகிய நூல்களைப் பயின்றஆரியர்கள் அவற்றிற்கேற்பத்தம் மொழியில் நூல்களியற்றிவிட்டுப் பிற்காலத்தில் அவற்றிலிருந்தே இவ்விரண்டு நூல்களும் களவாடப்பட்டன என்று கூறத் தொடங்கினர். அக்கருத்தை ஒத்துக் கூறுவதற்குத்தமிழகத்திலும் பரிமேலழர்களுக்கும், வையாபுரிகளுக்கும் குறைவில்லாமலேயே இருந்துள்ளனர்.

மொழிப்பிரச்னை : இலக்கியத் துறையிலும் இதுசாறும் சமயத்துறையிலும் எந்த அளவு ஆரியர்கள் திராவிடர்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று கண்டோம். அடுத்து மொழித்துறையில் எந்த அளவு கடன்பட்டிருக்கின்றனர் என்று காண்போம்.

பொதுவாக, வையாபுரியார் கூறியதைப்போன்று தமிழ் தன் சொல்வளத்தில், சமஸ்கிருதத்திற்குப் பெரிதும் கடன்பட்டிருக்கிதென்றே எல்லாரும் நம்புகின்றனர். அது மட்டுமல்ல தமிழ் எழுத்துக்கள்கூட வடமொழி எழுத்துக்களான 'பிராமி' எழுத்துக்களின்றே பிறந்தன என்றும் நம்பி வருகின்றனர். ஆனால் இத்துறையிலும் உண்மையை ஆராயப் புகுந்தால் வேடிக்கையான பல உண்மைகள் கிடைக்கும். சங்க காலத்துக்குப் பிற்பட்ட காலத்தில் அதாவது கி பி. 2-ம் நூற்றாண்டுக்குப் பிறகு வடமொழிக்கும், வடமொழிக் கருத்துக்களுக்கும் தமிழ் நாட்டில் மதிப்பு உண்டான பிறகே, ஒரு சில சமஸ்கிருதச் சொற்கள் தமிழில் குடிபுகுந்தன. ஆனால் சங்க காலத்துக்கு முற்பட்ட காலத்திலோ-ஏறத்தாழ, ஆரியர்கள் வடஇந்தியாவில் வந்து குடியேறத் தொடங்கிய காலத்திலோ நிலைமை தலைகீழாக இருந்தது. எப்படி, குடியேற வந்த ஆரியர்கள் பண்டைத் திராவிடரிடமிருந்து மதக் கோட்பாடுகளையும், கடவுளரையும் கடன் வாங்கினரோ அதுபோன்றே சொற்களையும் கடன் வாங்கலாயினர். இரு இனத்தார்கள் அடுத்து அடுத்து வாழவேண்டிய தேவை தோன்றும்பொழுது ஒரு மொழியினர் தம் மொழியில் இல்லாத சொற்களைப் பிறமொழியினின்று கடன் வாங்கவேண்டிய தேவை தோன்றுவது இயற்கை. அந்த விதிக்கேற்ப ஆரியர்கள் பற்பல சொற்களைத் திராவிடரிடமிருந்து பெற்றனர். திராவிடரும் தம் மொழியிலில்லாத ஒரு சில சொற்களைப் பெற்றனர். இந்தியாவிற்கு வந்த பிறகு சமஸ்கிருதம் எப்படிப் படிப்படியாக மாற்றம் அடைந்தது என்பதை வி. ஆர். ஆர். தீட்சதர் நன்கு விளக்கியுள்ளார். "சம்உறிதை'களில் காணப்படும் மொழியிலிருந்து 'பிராம்மணாக்'"களில் காணப்படும் மொழி வேறுபட்டுள்ளது. அதனினும் வேறுபட்டுள்ளது, பிற்கால இதிகாசங்கள், இலக்கியங்களில் காணப்படும் சமஸ்கிருதம். எனவே மாற்றமில்லாத ஒரே நிலையான சமஸ்கிருதம் என்று நாம் அந்த மொழியைக் குறிப்பிட முடியாது" என்று அவர் விளக்கியுள்ளார். இந்தப் படிப்படியான மாற்றத்திற்குரிய காரணமென்ன, என்று ஆராயப் புகுந்தால் திராவிட மொழியின் கலப்பினாலேயே ஆரியம் மாறிற்று என்பது நன்கு புலனாகும்.

இக்கருத்தை மேலும் தொடர்ந்து ஆராய்ந்த பேராசிரியர் பர்றோ (Burrough) என்ற ஆங்கிலேயர், பண்டை சமஸ்கிருத மொழியையும், அதன் துணைமொழியான இரானிய மொழியையும் கற்று, திராவிட மொழியினின்று வடமொழியில் குடியேறிய சொற்களென ஏறத்தாழ ஆயிரம் சொற்களைத் தக்க ஆதாரங்களுடன் காட்டியுள்ளார்.

உதாரணமாக 'பூஜை' என்ற ஒரு சொல்லைக் கொள்வோம். இச்சொல் சமஸ்கிருதத்தினின்றே தமிழில் குடியேறியதென்றே நாமும் எண்ண வேண்டியுள்ளது. ஆனால் இதன் அடிப்படை ஒலி அமைப்போ 'பூ+செய்' என்பதாகும்-அதாவது 'பூ' விட்டு வணக்கம் செய்தல் என்று பொருள்படும். தெய்வத்தைப் 'பூ' விட்டு வணங்கும் முறை திராவிடர்க்கே உரிய முறையாகும். பண்டைய ஆரியர்களோ ஆடுகளை பலியிட்டே, தம் வணக்கத்தைத் தெரிவிப்பர். எனவே பூ+செய் என்ற தூய திராவிடச் சொல்லே வடமொழியில் குடியேறிய "பூஜை" என்று மாறிவிட்டது என்று டாக்டர் பர்றோ ஆராய்ந்து நிறுவியுள்ளார். இந்த பூஜை என்ற சொல் வேறு எந்த ஆரிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்த இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் இல்லை என்பது குறிப்பிடத் தக்கது இதுபோன்றேதான் 'மீன்' என்ற தமிழ்ச் சொல்லும் 'மீன்' என்ற வடமொழிச் சொல்லினின்று பிறந்ததென்றே வாதிடுகின்றனர். ஆனால் 'மீன்' என்ற சொல் மின்னுதல் என்ற பொருளில் துவங்கி, விண் - மீனைக் குறித்துப் பின்னர் அதேபோன்று மின்னிச் செல்கின்ற கடல் மீனைக் குறித்தது. மீனற்ற நிலப்பகுதியினின்று வந்த ஆரியர் முதன் முறையாக மீனைக் கண்டதும் அந்தச் சொல்லையும் திராவிடரிடமிருந்து கடனாகப் பெற்றனர். ஆனால் பின்னர் வந்தவர்களோ 'மீன' என்ற சமஸ்கிருதச் சொல்லினின்றே இத்தூய்த் தமிழ்ச் சொல் பிறந்தது என்று முடிவு செய்துவிட்டனர்.

— 7-ம் பக்கம் —

★ "Krishna was originally a tribal God—a solar deity or a deity of vegetation he was some theistic and moral Sage who gradually became a God."— Prof. K. A. N.

— 4-ம் பக்கத் தொடர்ச்சி —

வரிசையாக எண்ணிக்கொண்டே வந்து அதன் பளபளப்பு, நிறம், கனம், பொலிவு, இவற்றையே நெடு நேரம் ஆராய்ந்துகொண்டிருந்தான். பொலிவுபற்றி ஆராயவே பெண்ணின் முகப்பொலிவிலிருந்து பொன்னின் நிறப்பொலிவுக்கு வந்தான் கம்பன். அழகுகளை முழுக்க எண்ணிக் கொண்டே வந்தவன் பொன்னு? பொலிவா என்று தன் மனத்துள் கேட்டுக்கொண்டான். பொன் சிறந்ததா? அழகு சிறந்ததா? எது சிறந்தது? எப்படிக் கண்டுகொள்ள முடியும்? பிறரை எது அதிகமாகக் கவர்கின்றதோ அதுதானே உயர்ந்ததாகக் கருதப்படும். சிந்தனையின் முடிவும் கிடைத்தது. காத்திருந்தவன் போல் அதைக் கவிதையாகவும் பாடிவிட்டான். கள்ளர் மனத்தைத் தூண்டித் தன்னை அவர்பால் ஒப்படைப்பது பொலிவே - அதாவது அழகே என்பது முடிவாயிற்று. இது கவிதை.

"பொன்னினுங் கள்ளரைப்
பொலிவு தூண்டுமால்"

பொலிவுதான்தூண்டும் என்கின்றான்

கம்பனுக்குத்தான் இந்த எண்ணம் வந்தது; பாடினான். ஷேக்ஸ்பியருக்குமா இந்த எண்ணம் வரவேண்டும்? பாடவேண்டும்? பாருங்கள்.

"Beauty provoketh thieves
soonert han gold."

எனும் இந்த அடி "As you like it" என்னும் படைப்பில் Act I. Sc. 3. Line 113-ல் காணப்படுகின்றது.

Beauty—அழகு, பொலிவு.

Provoketh—Provokes-தூண்டுகின்றது.

பொன்னைக் காட்டிலும் பொருளினது பொலிவே கள்ளனைக் கவர்ந்திழுக்கிறது-தூண்டுகிறது.

கம்பனுக்கெழுந்த அதே எண்ணம், கிடைத்த அதே முடிவு, ஷேக்ஸ்பியருக்கும்; இருவரும் கவிஞர்கள்; தங்கள் கருத்துக்களைக் கவிதையாகவே பாடினார்கள். வியக்கத்தக்கது இந்த ஒற்றுமை! இருவரும் கலந்து பேசியே இதனை எழுதியிருப்பார்களோ? இருக்கமுடியாதே! கம்பன் காலம் 12-ம் நூற்றாண்டு. ஷேக்ஸ்பியர் காலம் 16-ம் நூற்றாண்டின் இறுதி. ஆயிரமாயிரம் கல் தொலைவு; கடல் இருவருக்கும் இடையில்; பின் எப்படிப் பாடினார்கள்? ஒருவேளை கம்பனைப் பார்த்து ஷேக்ஸ்பியர் 'காப்பி'யே அடித்தானோ? கம்பனின் 'மேதா விலாசம்' புறப்படும் எத்துணையோ இடங்கள் இருக்க, அவற்றையெல்லாம்விட்டுப் போயும் போயும் இதைத்தானா கவியரசன் ஷேக்ஸ்பியர் "காப்பி" அடிக்கப்போகிறான்? அப்படியே ஒருவேளை வாதத்திற்காக இதை ஒப்புக்கொண்டாலும் இப்படியா காப்பியடிப்பான்? காப்பியடித்தாலும் பிறருக்குத் தெரியாதவாறு அடித்து, தன்கைச் சரக்கை அத்துடன் கூட்டிக் குழைத்து இன்னமும் சிறக்கச் செய்தல்லவா இருப்பான்? இத்தனை காரணங்களும் அல்ல. உயர்ந்த உண்மை என்று தனக்குப்பட்டதை ஒருவன் சொல்லுகின்றான். அதே கருத்தைச் சிந்திக்கின்ற மற்றொருவனும் சொல்லிச் செல்லுகின்றான். கருத்தளவில் இந்த ஒற்றுமை எங்கும் இருக்கும்! ஆனால் இங்கு நாம் காண்பதுபோலச் சொல்லுக்குச் சொல்லும், பொருளுக்குப் பொருளும் கருத்துக்குக் கருத்தும், அடிக்கு அடியும் ஒப்புமை கொண்டு ஒற்றுமை காட்டி நிற்பது போன்ற வியப்பு வேறு எங்குமில்லை. நான் முன்னுரையிலே குறித்திருப்பதை மீண்டும் ஒருமுறை நினைவுபடுத்திக்கொண்டால் உண்மை புலனாகும்.

இதே வகையில் மற்றொன்று. சொல்லுகின்ற கருத்தை வளவளவென்று விளக்கெண்ணெயாய் விளக்கிக்கொண்டிராமல், சுருங்கச் சொல்வதையே அறிவுடையோர் விரும்புவர். சுருங்கச் சொல்லல் என்பது தானே தமிழிலக்கணம் கூறும் பத்தழகுகளில் முதன்மையானதாக விளங்குகின்றது. இதன் பெருமையும் சிறப்புமே இதற்கு முதலிடத்தைத் தேடித்தந்தன. இலக்கணங்கள் அனைத்துமே இவ்விதிக்குக் கட்டுப்பட்டவை, நன்னூலில் சில நூற்பாக்களே இதற்குக் கட்டுப்பட்டு நிற்பவை. எடுத்துக்காட்டாக 116, 406, 460 போன்ற சில நூற்பாக்களைக் குறிக்கலாம்.

இந்தச் சுருங்கச் சொல்லல் மொழிப் புலமை வந்தார்க்கேயன்றி மற்றையோர்க்கு முடியாத ஒன்று. எல்லாப் புலவர்களும் எல்லா மொழியாளரும் இதை ஏற்றுக் கொள்ளுகின்றனர்.

சிறந்த வடமொழிக் கவிஞர்களில் ஒருவனான காளிதாசனும் இந்தக் கருத்தைத் தனது 'இரகுவம்சத்தில்' 'ஸத்யாய மித பாஷிணம்' என்று குறிப்பதாகச் சொல்லுகின்றார்கள் இதே கருத்தை ஷேக்ஸ்பியரும் தனது ஆம்லெட் (Hamlet) என்னும் படைப்பில் 'Brevity is the soul of Wit' (II 2) என்று குறிப்பிடுகின்றான். இதனையே இன்னும் பல அறிஞர்களும் குறிக்கின்றனர். ஒற்றுமை, அறிவின் வளத்தையும் உயர்ந்த எண்ணத்தையும் காட்டுவதொன்றாகுமே தவிரத் தாழ்ந்த மதியைக் காட்டாது.

கவிஞர் டெனிசன் "It is only noble to be good" என்று குறித்தது போலவே, கவிஞன் பைரனும் "To be noble we will be good (Childe Harold) என்று குறிக்கின்றான்.

உடலை இழித்தும் பழித்தும் பாடி அதன் வழியாகவும், பிறவற்றின் வழியாகவும் நிலையாமையை உணர்த்துகின்ற சிலரும் உயிரின் உன்னத நிலையைப்பற்றிஎடுத்துச்சொல்லாமல் விடுவதில்லை. சொல்லி, அவை மோட்சலோகம் சேரவும் வழிவகைகள் சொல்லித் தருவர். உடலை இழித்து உயிரை — ஞானத்தை உயர்த்திப் பேசுதலில் தமிழ்நாட்டுச் சித்தர்கள் கைதேர்ந்தவர்கள்.

'வெயில் கண்ட மஞ்சள்போன்ற மாதரழகை' என்று எழுதியும், 'நண்ணும் சளி நாசிதனை நற்குமிழென்றும்' என்று கிண்டல் பேசியும், 'புழுமலக்கூடு' என்று உரைத்தும் இன்னபிறவும் சொல்லி உடலொடு கூடிய-ஐம்புல இன்பங்களை நுகரும் உலக வாழ்வை இகழ்கின்ற அந்தச் சித்தர்களைப் போலவே பிறநாடுகளிலும் சிலர் இருக்கத்தான் செய்கின்றார்கள். சில கவிஞர்கள் வாழ்வின் ஒரு பகுதியை அவலமாகப் படம் பிடித்துக்காட்டி நெஞ்சைக் குமைப்பார்கள். இத்தகைய வரிசையில் ஒரு கவிஞர் ஒரு கவிதையைப் பாடியிருக்கின்றார்.

'தொழுநோயாளனின் மனைவி' என்னும் அந்த ஆங்கிலப் பாடல் தொழுநோயன் மனைவி பேசுவதாகவே பாடப்பட்டுள்ளது. இதனைக் கவிஞர் டெனிசன் பாடியிருக்கின்றார். பாடலடிகளைத் தருகிறேன்.

"The beauty that endures
on the spiritual height
....
Shall flash thro' one another
in a moment as we will."

(Happy-The Leper's Bride. P. 597) என்று கொணர்ந்து முடித்து விடுகின்றார். நெஞ்சை உலுக்கும் அவலம் இதில் இழைவதைக் காண ஆங்கிலக் கவிதையை முழுக்கப் படித்துத்தான் ஆகவேண்டும்.

கருத்துக்கள் எடுத்தாளப் படுதலைச் சான்றுகளுடன் கண்டோம்; இனி, காட்சி அமைப்புக்களே ஆளப்படும் வகையையும் காண்போம்.

(அடுத்த இதழில் முடியும்)

வருந்துகிறோம்.

நண்பர் ப. புகழேந்தி அவர்களின் சிறிய தகப்பனார் திரு. தி. முத்தையா அவர்கள் 7-11-'59 பகல் 1 மணி அளவில், கடையநல்லூர் முத்துக்கிருஷ்ணபுரத்திலுள்ள தமது இல்லத்தில் இயற்கை எய்தியதை அறிவிக்க வருந்துகிறோம்.

★

மதுரை தியாகராசர் கல்லூரித் தமிழ்த்துறையில் பணியாற்றும் திரு. மெ. சுந்தரம் எம். ஏ., எம். ஓ. எல்., எம். லிட். அவர்களின் இல்லத்தரசியார் சிந்தாமணி அவர்கள் 1-11-'59 அன்று காலமானதை அறிவிக்க வருந்துகிறோம்.

★

ஒரு திங்களுககுள்ளாக, திரு. தமிழண்ணலின் தாயாரும் தந்தையாரும் மறைந்த சோகத்தைத் தெரிவிக்க வருந்துகிறோம்

★

அனைவர்க்கும் நம் நெஞ்சப் பரிவு உரித்தாகுக. காலம்தான் அவர்கள் கண்ணீரைத் துடைக்க வேண்டும்.—ஆசிரியர்.

நூல் நயம்

- செல்லையா -

★

மறுமலர்ச்சிக் கவிதைகள்.

ஆசிரியர் :
பேராசிரியர் அ. கி. பரந்தாமனார், எம். ஏ.

இனிய எளிய தமிழில் பாடும் பாடல்கள் தாம், எல்லாவகை வெற்றிகளையும் ஈட்டித் தரமுடியும் என்பதற்கு, பேராசிரியர் திரு. **அ. கி. பரந்தாமனார் எம். ஏ.** அவர்களின் இக்கவிதைத் தொகுதியும் ஒரு சான்று. பல்லாண்டுகளாகத் தமிழாசிரியராகத் தொண்டு புரிந்து வரும் இவ்வாசிரியர், தாம் பணியாற்றி வந்த பள்ளிகளின் மாணவர்களையெல்லாம் கவிதை எழுத ஊக்கி வந்தவர் ஆவார். அத்தோடு அவ்வப்போது அவர் பல பல பாக்களைப் புனைந்து, அவற்றை அம்மாணவர்கட்கு வழிகாட்டும் கருவிகளாக ஆக்கி வந்திருக்கிறார்கள். இவ்வாறு கடந்த முப்பத்திரண்டு ஆண்டுகளாகத் தாம் பாடி வந்த பாடல்களையெல்லாம் ஒன்றாகத் தொகுத்து "மறுமலர்ச்சிக் கவிதைகள்" என்ற தலைப்பில் வெளியிட்டிருக்கின்றார், ஆசிரியர்.

கவிஞன் இயற்கையின் காதலன். "குயிலிசையும் வண்டிசையும் குழவியிளஞ் சொல்லிசையும், துயில் விடுக்குங் காற்றிசையும் தொடர் மலையாற்றின்னிசையும்" அவை சார்ந்த பிறவும், இயற்கை கவிஞனுக்களிக்கும் பெருவிருந்துகள் அவற்றைக் கண்ட எக்கவிஞன் உள்ளம்தான் பெருக்கெடுக்காது. கவிஞர் பரந்தாமனாரும் இப்படியே இயற்கையைக் கண்டு பாடுகிறார்.

**"மந்திபயில் மலையிடத்தும்
சந்தியொளி வானிடத்தும்
எந்தவொரு நிலையிடத்தும்
எமக்களிப்பாய் திருக்காட்சி!"**

என்று இயற்கையைப் பார்த்த கதை சொல்கின்ற இவர், அவளின் அழகு தவழுமிடங்களையும் சொல்கின்றார்.

**"மலரழகும் கொடியழகும்
மதியழகும் மலையழகும்
கலகலென ஓடிவருங்
கானாற்றின் வழியழகும்
அலையழகும் கடலழகும்
அருங்குணப்பெண் எழிலழகும்
இலகியற்கை மாதேவி
எழிலுன்றன் அழகலவோ ?"**

இயற்கையின் நலனையும் அழகையும் இவர் பெரிதும் உணர்ந்திருப்பதை, இவர் பணியாற்றிய பள்ளியின்முன் நின்ற "நீளால நன்மரம்" வீழ்ந்தபின் இவர் பாடிய கையறுநிலைச் செய்யுள் காட்டும்.

காதல் எல்லர்க்கும் - எவ்வுயிர்க்கும் இருக்கும் இயற்கைப் பண்பு என்பதை விளக்கும் ஆசிரியர்,

**"காலம் வந்தால் பூமலரும்;
காதல் மலரும் பருவத்தில்!"**

என்று அது எப்போது வரும் என்பதையும் விளக்குகின்றார்.

"காத லற்ற வாழ்வு-சுடு
காட்டில் வாழும் வாழ்வே !"

என்றும் விளக்கிச் செல்கிருர்.

"எண்ணிலாமொழியுள் எல்லாம்
இணையிலா மொழியாய் நிற்கும்"
தனித்தமிழ் பற்றிப் பின்னர் பாடுகின்ருர்.

"கனியினும் இனிக்குர் பண்பு,
கவினுறும் சொல்லின் ஆக்கம்,
நனிபொருள் விளையும் சந்தி,
நவின்றிரு நூற்பா மாண்பு,
தொனிப்பொருள் அளிக்கும்
இன்பம்,
தொகைவகை நாவலர்கள்
எல்லாம்
தனித்தமிழ்ச் சிறப்பைக் காட்டித்
தரணியில் பெருமை காட்டும்"

தமிழை எவராகிலும் அழிக்க முடியுமா? முடியாது.

"தமிழன் இருக்கும் வரைக்கும்
—மண்ணில்
தமிழன் உள்ளம் மட்டும்
அமிழ்தின் இனிய தமிழை-உயிர்
அளித்துப் பாது காப்பான் !"

எனவே தமிழை அழிக்கமுடியாது, எவராலும். இவை கவிஞரின் சொற்றிறம் காட்டும் எஃகுக் கோட்டைகள்.

நூலின் இறுதியில் உள்ள திரு. வி. க. ஆற்றுப்படை, சொல் வேகத்தாலும் கருத்தாழத்தாலும். மூன்று நான்கு முறை படித்தும் சலிப்புத் தட்டாது, பேராசிரியர் பரந்தாமனுரின் புலமையை மலை மலையாய்க் காட்டுகிறது; ஒவ்வொரு முறையும் புதுபுதுப் பொருளைத் தருகிறது; அழகைக் காட்டுகிறது; நூலுக்கே மணிமுடியாய்த் திகழ்கிறது.

"புகழினை நாடிடின்
தலைமையை நாடிடின்
போலித் தொண்டே
புகுந்திடும் அம்மா !"

—இது நகாசு வேலைக்காரர்களுக்கு நல்ல ஒரு பாடம்.

"புகழைப் பிடித்திடில்
இகழ்ந்திடும் புகழுனை
புகழினை இகழ்ந்தவர்
புகழ்மிகப் பெற்ருர்;
புகழினை உகந்தவர்
இகழ்ச்சியே உற்ருர்;
தொண்டு செய்க;
தோன்றிடும் நற்புகழ் !"

இந்த வரிகளைக் கட்டாயம் அரசியல் உலகின் அலங்கார பூபதிகளாம் கூலித்தலைவர்கள் அறிய வேண்டும். இத்தனை அழகிய வரிகளை உடைய இக்கவிதையையும், இக்கவிதையை உள்ளடக்கிய தொகுதியையும் தமிழன் ஒருமுறையாகிலும் படித்தால் போதும்—பல் சுவைப் பயனையும் பெறலாம்.

ஆமாம். அழகிய தாளில் கவர்ச்சியான முகப்புடன் இனிய கவிதைகளைப் படைத்துதவிய திரு. பரந்தாமனுர்க்குத் தமிழுலகம் வாழ்த்துக் கூறுகிறது.

விலை ரூ. 2-50.

விற்பனை உரிமை:
பாரி நிலையம், சென்னை-1.

ராஜாபார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
...சங்குப்பிள்ளை & கோ, திண்டுக்கல்ரோடு, மதுரை.

— 5-ம் பக்கத் தொடர்ச்சி —

இவ்வாறே வடமொழியினின்று தமிழில் குடியேறியதாகக் கூறப்படுகின்ற சொற்களைக் கூர்ந்து ஆராய்ந்தால் அவற்றில் பெரும்பாலானவை தமிழிலிருந்து வடமொழியில் குடியேறியவையே என்பது நன்கு புலனுகும்.

மேலும் தமிழ்ச் சொல்லமைப்பையும், சமஸ்கிருதச் சொல்லமைப்பையும் உற்று ஆராய்ந்த தீட்சதர், இரண்டுக்கும் மிக்க வேற்றுமையுள்ளது என்று உரைத்துள்ளார். "தமிழ்ச் சொற்களின் பகுதிகளையும், அவற்றின் பொருள்களையும், விகுதி, இடைநிலை முதலியவற்றை ஏற்கும் முறையையும் கூர்ந்து பார்த்தால் தமிழ்ச் சொல்லமைப்பு முறை தனித்தன்மை வாய்ந்தது, வடமொழியுடன் எத்தகைய தொடர்பும் பெற்றதன்று என்பது தெளிவாகும். தமிழ்ப் பெயர்ச் சொற்களில் பலவும் வினைச் சொற்களிலிருந்து பிறந்தனவே ஆகும். உ-ம்: பகு-பகல், குதி-குதிரை...இம்முறைகள் திராவிட மொழிகள் அனைத்துக்கும் பொதுவாக உள்ளனவே ஒழிய வடமொழிக்குத் தொடர்புடையன அல்ல. இவற்றை நோக்குங்காலை, தமிழ் மட்டுமல்ல, துவக்கத்தில் திராவிட மொழிகள் அனைத்துமே வடமொழியின் தொடர்பில்லாமல் தனியே வளர்ந்தனவே; மாருக சமஸ்கிருதத்தில், வேத காலத்திலும் சிவ, மீன், போன்ற பல சொற்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன" என்று ஐயத்திற்கு இடமின்றி உரைத்துள்ளார். மேலும் தொடர்ந்து "எனவே, வடமொழியினின்று தமிழ் உண்டாயிற்று என்று கூறுவது பெருந்தவருகும். தமிழ் மட்டுமல்லாது திராவிட மொழிகள் அனைத்துமே தனியே வளர்ந்து வளம்பெற்றனவே ஆம். சமஸ்கிருதத் தொடர்பு தோன்றியதென்ருல் அது மிகமிகப் பிற்பட்ட காலத்திலேதான். தமிழ், உலகில் வேறு எந்த மொழியோடும் தொடர்போ, ஒப்புமையோ இல்லாமல் இருப்பதால், தென்னகத்தில் துவக்ககாலத்திலிருந்து தோன்றி வளர்ந்த மொழி அதுவே ஆகும். கற்காலங்களில் வாழ்ந்த பழங்குடி மக்களின் கிளை மொழிகள் வளர்ந்து வளம்பெற்று சங்கத் தமிழாகத் திகழ்ந்தது என்று கொள்வதே பொருத்தமுடைத்து" என்று அறுதியிட்டுக் கூறியுள்ளார்.

திராவிடர் யார்?: இறுதியாகத் திராவிடர் என்பவர் யார்? வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் அவர்கள் வாழ்ந்த இடம் யாது? அவர்கள் தோன்றிய இடம் யாது? என்ற சில வினுக்களுக்கு விடை காண்போம்.

பொதுவாக, திராவிடர்களும், ஆரியர்களைப் போலவே இந்தியாவுக்கு வெளியிலிருந்து வந்தவர்கள் என்று பரவியுள்ளது. மெசபொடேமியாவுக்கு அருகிலிருந்து ஆரியருக்கு முன்னர் இந்தியாவுக்கு வந்தனர் என்ற கருத்து எலியட் சுமித் (Elliot Smith), டாக்டர் கில்பர்ட் ஸ்லேடர் போன்றவர்களால் கூறப்பட்டது. இவர்கள் உலக நாகரிகமே எகிப்தில்தான் துவங்கியது என்று நிலைநாட்டுவதற்காக, அதற்கு அண்மையான இடத்தினின்று திராவிடர் வந்தனர் என்று கூறுகின்றனர். ஆனுல் எகிப்து நாகரிகம் சிறப்பதற்கு முன்னரே சிந்து சமவெளியிலும், தென்னகத்திலும் திராவிடர் சிறந்த நாகரிகத்துடன் திகழ்ந்தனர் என்ற உண்மை மேற்கண்ட கொள்கையைத் தகர்த்தெறிந்துவிடுகிறது. அடுத்து பேராசிரியார் கனசபை போன்ருர், மங்கோலியப் பகுதியினின்று வடகிழக்கு திசையில் இந்தியாவுக்குள் நுழைந்தவர் திராவிடர் என்று கூறியுள்ளனர். வங்காளத்தில் தம்ரலிப்திஸ் (Tamra liptis) என்ற ஓர் இனத்தார் வாழ்வதே இவர் காட்டும் ஆதரமாகும். தம்ரலிப்திஸ் என்ற சொல் 'தமிலிதி' என்றும், பின்னர் தமிழ் என்றும் மருவி வழங்கிற்று என்று அவர் வலிந்து கூறுகிருர். ஆனுல் மங்கோலியர்கள் இடைப்பட்ட பலரையும் வென்று தென்னகத்தில் பெருவாரியாகக் குடியேறினர் என்ற கொள்கை அவ்வளவு பொருத்தமானதன்று என்றே தீட்சதரும் மறுக்கிருர்.

இன்றளவும் தென்னகத்தின் மலைகளிலும் காடுகளிலும் வாழ்கின்ற தோதவர், குறும்பர், முண்டர்கள், செஞ்சுக்கள், ஏனுதிகள் போன்ற பல புராதன குடிமக்கள் வாழ்ந்து வருவதே இத்தகைய ஐயத்திற்கு இடமளிப்பதாகும். இவர்களே தென்னகத்தின் பண்டைய மக்களென்றும் அவர்களைக் காடுகளுக்கும் மலைகளுக்கும் விரட்டிவிட்டுத் திராவிடர் குடியேறினர் என்றும் பலரும் கருதுகின்றனர். ஆனுல் தீட்சதரோ அக்கருத்தினை மறுத்து, தென்னகத்தில் கற்காலங்களில் வாழ்ந்த மக்களில் ஒரு சில இனத்தார் மலைகளிலும், காடுகளிலும் ஒதுங்கிவிட்டு வாழ்க்கை முறையில் முன்னேருமல், அதே நிலையில் நிலைபெற்றுவிட்டனர் என்று கொள்வதே பொருத்தமானதாகும் என்றும், அத்தகைய மறைவிடங்களை ஒதுக்கிவிட்டு உலோக காலத்தில் முன்னேற்றம் கண்டு வேளாண்மை, கால்நடைப் பண்ணை போன்ற நாகரிகத்துறைகளில் முன்னேறிச் சமவெளிகளில் நகரங்கள் அமைக்கின்ற அளவிற்கு முன்னேறியவர்களே திராவிடர்கள் என்ற பெயருக்கு உரியவராயினர் என்றும் கூறுகின்ருர். பேராசிரியர் ஹெர்பர்ட் ரிசிலி (Herbert Risley) என்பாரும் இந்திய மண்ணில் பிறந்து வளர்ந்த பழங்குடிமக்களின் வழிவந்தவர்களே திராவிடர்கள் என்று துணிந்து கூறியுள்ளார். எனவே திராவிடர்கள் இந்தியாவுக்கு வெளியிலிருந்து வந்தனர் என்று கூறுவது பெருந்தவருகும். இந்தியாவில் தோன்றிய பழங்குடி மக்களில் பழங் கற்காலம், புதுக் கற்காலம், உலோக காலம் போன்ற பல படிகளையும் முறையாகக் கடந்து மிகச் சிறந்த நாகரிகத்தைக் கண்ட பெருமையுடையவரே திராவிடராவர்.

இதுகாறும் கண்டவற்ருல், திராவிடர் என்ற சொல் பண்டைக் காலத்தில் தமிழரையே குறித்துப் பின்னர், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் ஆகிய மொழிகள் அடங்கிய ஒரு பெருங்குழுவைக் குறிக்கத் தொடங்கியது என்று கொள்வதே பொருத்தமானதாகும். இவ்வாறு தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட பண்டைத் திராவிடர் யாவரும் இந்த நாட்டு மண்ணிலேயே பிறந்து வளர்ந்து செழித்து விளங்கிய பழங்குடி மக்களே அன்றி, வெளியே இருந்து போந்தவர் அல்லர் என்பதும் தெளிவாகும். மற்றும் திராவிடரின் பழம் மொழியான தமிழ், சமஸ்கிருதத்துக்கு எந்த வகையிலும் கடன்படவில்லை, மாருகக் கடன் ஈந்துள்ளது என்று கொள்வதே நேர்மையான கருத்தாகும். மேலும், ஆரியர்கள் குடியேறிய காலத்தில் வாழ்ந்து வந்த பண்டைத் திராவிடர் ஒப்பாரும் மிக்காரும் இல்லாது சீரும் சிறப்பும் மிக்க நாகரிகத்தைப் பெற்று வாழ்ந்து வந்தனர் என்பது தெளிவாகும். இவ்வாறு சிறப்புடன் வாழ்ந்த திராவிடர் தம் மதக் கொள்கைகளையும், மொழி வளத்தையும், கலைச் செல்வத்தையும் வந்தவர்க்கு வழங்கினர் என்பதும் உண்மையாகும். இவ்வாறு கடன் பெற்ற கலைச் செல்வத்தையும், மொழி வளத்தையும் சமஸ்கிருதத்தில் எழுதி வைத்த ஆரியர்கள் பிற்காலத்தில் அவையெல்லாம் தாம் கொணர்ந்த சொத்துக்கள் என்றும், திராவிடர்கள் களவாடிவிட்டனர் என்றும் துணிந்து கூறலாயினர். வெளுத்ததெல்லாம் பால் என்று நம்பும வெள்ளையுள்ளம் கொண்ட சிலர் இதையே உண்மையெனக் கொண்டு இதற்கு ஆதாரங்களும் தேடத் துவங்கலாயினர். அத்தகைய பட்டியலில் சேர்க்கப்பட வேண்டியவர்களே பரிமேலழகர், வையாபுரி பிள்ளை போன்றவர்கள் என்பது தெளிவு.

எனவே இவ்வாறு சீரோடு, சிறப்போடு, வளத்தோடு, கலைச் செல்வத்தோடு திகழ்ந்த பண்டைத் திராவிடத்தின் உண்மை நிலையினை திராவிடர் அனைவர்க்கும் அறிவித்து வடவர்கள் திராவிடர்க்கு எந்த அளவு கடமைப்பட்டனர் என்ற உண்மையையும் வெளியிட்டு, இனியும் வடவரின் ஏமாற்றுச் செயல்களுக்கு உள்ளாகாத வகையில் திராவிடரைப் பாதுகாத்து,

"எப்பொருள் எத்தன்மைத்
தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப
தறிவு"

என்ற வள்ளுவர் வகுத்த அறிவு நெறியில் திராவிடப் பெருங்குடி மக்களை நிறுத்தி, இன்பத் திராவிடத்தைப் பெற்று, அதைப் பண்டைத் திராவிடத்தினும் சிறப்பான வகையில் பொலிய வைக்க வேண்டுமென்பதே நம்மனைவரின் கடமையாக இருக்க வேண்டும் என்று என் கட்டுரையை இத்துடன் முடித்துக் கொள்கிறேன். ★

"ஆமை" பெற்ற குறட்பாக்கள்

"ஆமை" பெற்ற குறட்பாக்களின் எண்களைக் குறித்தனுப்புக.

இறுதி நாள்: 16-11-'59

★

"கண்" பெற்ற குறட்பாக்கள்-
ஓர் அறிவிப்பு

கடந்தகிழமை. "கண்" பெற்ற குறள்களை எழுதியனுப்பியிருந்த நண்பர்களின் பெயர்களை வெளியிட்டிருந்தோம். இடமில்லாததால் சிலர் பெயர்களை வெளியிட இயலாது போயிற்று. அப்படி விடுபட்ட பெயர்கள் கீழ் வருவன:

புலவர் துரைமோகனன்—வேலூர், கா. அ. மல்லிகா—சென்னை-5, புதுவை இரா. சரசுவதி — சென்னை-5, சி. சென்னியப்பன்—சென்னிமலை, க. சு. மணியன்—கோவை-4, மதி ஒளி — சென்னை-5, சி. கண்ணையன்—கும்பகோணம்.

அச்சுப்பொறியிலேற்பட்ட கோளாருல் இவ்விதழ் எட்டே பக்கங்களில் அமைந்துள்ளது.

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

இட்லர்: யாரோ ஒரு சாஸ்திரியோ, சர்மாவோ எனக்கு எழுதியிருந்தார். நான் முதலில் நம்பவில்லை. காசுமீர்ப் போர் முனைக்குப் பின்னர்தான் நம்பினேன். எப்போதாகிலும் எதிரிகள் நச்சுக் காற்றைப் பரப்பிவிட்டிருக்கிறார்களென்றுபட்டால், எனக்குப் பிடிக்காத யூதர்களையே அங்கே அனுப்பிச் சோதனை செய்வேன். செத்தாலும், சாவது யூதர்கள்தாமே! காசுமீரில் போர் என்றதும் எங்கே நீயே போகப்போகிறாயோ என்று நினைத்தேன். நல்லவேளை - மதராசி பட்டாளத்தையே போர்முனைகளுக்கு அனுப்பி வைத்தாய். இந்தச் சமர்த்தைக் கண்டவுடன்தான் நான் உன்னையும் நம்மினத்தவன் என்று நம்பினேன்!

நேரு: ஆம்! ஆம்! நாமிருவரும் ஒரே இனத்தோர்தான்.

இட்லர்: நம் ஆரியஇனம் ஓங்கி உயர்வதாகுக. அதன் புகழ் எங்கும் பரவிச் சிறப்பதாகுக!- இதுதான் பிறந்த நாள் வாழ்த்து. நம்மைப் போன்ற சர்வாதிகளுக்கு எப்போதும் வெடி உண்டு. ஆனால் நாம் பிறன் கையால் சாகவேகூடாது. சாவு தவிர்க்கமுடியாத நிலையிலிருந்தால், என்போல் இதனால் முடித்துக்கொள். - இதுவே என் பிறந்தநாள் பரிசு. (இட்லர் நேருவிடம் நச்சுக்குப்பி ஒன்றைத் தருகிறான்; செல்கிறான். அடுத்து முசோலினி வருகிறான்.)

முசோ: "கர்மவீரன்-கதர்ச்சீமான்" என்றெல்லாம் உலகத்தார் போற்றிப் புகழும் அற்புத மாமா நேரு நீங்கள்தானா?

நேரு: ஆமாம்!

முசோ: தங்கள் பக்கத்திலிருக்கும் தங்கநிற ஆப்பிள் எந்தச் சீமை ஆப்பிள்?

நேரு: அய்யய்யோ, அது என் மகளய்யா!

முசோ: மன்னிக்கவேண்டும். செத்தாலும் போகவில்லை, இந்தப் பழைய வாசனை. இம்... என்னுடையவும் இட்லருடையவும் ஆன அருள்நெறியை இந்த உலகத்தில் நீர் பரப்பி வருவதாகக் கேள்விப்பட்டேன். அதனால் கழிபேருவகையுற்று உம்மைக் கண்டு போக வந்தேன்.

நேரு: உங்கள் முறையைப் பின்பற்றுகிறேனா?

முசோ: அதென்ன அப்படிக் கேட்கிறீர்? என்னையும் தோற்கடித்துவிட்டீரே நீர்! நானாகிலும் என்னைத் தேர்ந்தெடுத்து, பாராளுமன்றம் கூட்டித் தலைவன் ஆக ஆக்கியோரை எல்லாம் மறந்து, தலைவனானதும் கட்சியையும் பாராளும் மன்றத்தையும் கலைத்தேன். நீரோ உம் கட்சியையும் உம் ஆட்சியையும் குடும்பத்திறகுள்ளேயே வைத்துக் கொண்டிருக்கிறீர்! இந்திரா காந்தி காங்கிரசுத் தலைவி; பெரோசு காந்தி பாராளுமன்ற உறுப்பினர்; விசயலட்சுமி இங்கிலாந்தில் தூதர்! ஆகா, நான் ஆண்டபொழுது எனக்குதவ இப்படி உறவினரில்லையே!

நானாகிலும் பலரை நேரடியாகக் கொலை செய்து அந்த ஆட்சியை உறுதிப்படுத்திக் கொண்டேன். நீர் எந்தத் தொல்லையும் படவில்லை. உம் ஆட்சிமூலம் ஒரே நாளில் பொதுவுடைமையரைக் கேரளாவை விட்டு ஓடச் செய்தீர். கொலைகளை உம் கட்சியினர் மேற்கொண்டுவிட்டனர். ஆக என்னையும் மிஞ்சிய நீர், என்றென்றும் வாழ்ந்து நம் பரம்பரையைத் தழைக்கச் செய்ய உம்மை வாழ்த்துகிறேன்;

(முசோலினி இந்திராவுக்கும் தன் அன்பைத் தெரிவித்துவிட்டுப் போகிறான். அடுத்து மவுண்ட்பேட்டன் வருகிறார்.)

மவுண்ட்: மாம்பழப் பரிசு தரும் மாமா நேரு அவர்களே, நீங்கள் நீடு வாழ்க!

நேரு: ஓ. மவுண்ட்பேட்டன் துரை மகனாரா? வருக! வருக! தங்கள் மனைவியாரும் வந்திருக்கிறார்களா?

மவுண்ட்: வேலை அதிகம். மகள் மட்டும்தான் வந்திருக்கிறாள்.

நேரு: அவளாவது வந்தாளே!

மவுண்ட்: ஆட்சித் தொல்லைகள் எப்படி உள்ளன? மதுவிலக்கெல்லாம் எப்படியிருக்கிறது.

இந்திரா: நாளுக்கு நாள் ஆட்சி வளம் கொழிக்கிறது. நாடெங்கும் ரத்த ஆறு ஓடுகிறது. அது கிடக்கட்டும். நீங்கள் வந்த களைப்பு நீங்க, "சாம்பெயின்" சாப்பிடுங்கள்.

மவுண்ட்: காந்தி பிறந்த நாடென்றால் காந்தி பிறந்த நாடுதான். இங்குபோல் எங்குமில்லை விருந்துபசாரம்! ஆகா, இன்னும் கொஞ்சம் ஊற்றுங்கள்! காந்தி நாட்டின் நலத்திற்காக அருந்துவோம்! உங்கள் நலத்திற்காகவும் அருந்துவோம்!

(ஆனந்தத்தின் உச்ச நிலையில் அவர் போனபின், குருசேவ் வருகிறார்.)

குரு: யார் எது சொன்னாலும் நீங்கள், உங்கள், "மாதிரி சோசலிசத்தை"க் கைவிடாதீர்கள், காம்ரேட்! அப்போதுதான் நீங்கள் மனிதர் மாதிரி உலவ முடியும்.

நேரு: ஆமாம் லெனினின் வழி வந்த உங்களை காந்தியின் வழி வந்த நான் ஒன்று கேட்கிறேன், ஐயம் அகல. இனவாரியாக எவரும் பிரிய விரும்பினால் பிரியலாமென்று உங்கள் அரசியல் சட்டத்தில் ஒரு வரி கிடக்கிறதாமே!

குரு: ஆமாம் காம்ரேட்! சில கால கட்டங்களிலே யதார்த்த வாதத்திற்கேற்ற வார்த்தைகளைப் போடாவிட்டால் வெகுசனப் புரட்சி ஏற்பட்டுவிடுமே! அதனால்தான்...

நேரு: என் பிறந்த தினப் பரிசாக அந்த சொற்களை வெட்டியெடுத்துத் தந்துவிடுகிறீர்களா? அதைக் காட்டி இங்கு பலர் எழுகிறார்கள்.

குரு: அப்படியே தந்தோம். எப்படியோ பூர்சுவா எதிர்ப்புப் போராட்டமே ஓங்கி இனப் பிரச்னைகள் சிதைந்தால் சரி.

இந்திரா: குருசேவாய நமஹ! ஆபத்பாந்தவாய நமஹ!

குரு: சரி, சரி; காம்ரேட்! காம்ரேடி! நான் காலா காலத்தில் சந்திரமண்டலத்துக்குப் போய், எங்கள் கொடி ஒழுங்காக இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அமெரிக்கா ஏவுகணை விட்டு அதை வெட்ட முயல்வதாகக் கேள்வி. வருகிறேன். செங்கொடி ஜிந்தாபாத்! ஜிந்தாபாத்!

இந்திரா: இந்தா இருக்கு ஆமதாபாத்; இதோ இருக்கு அலகாபாத்! (என்றவாறே ஒரு நிலப்படத்தைத் தூக்கிக் காட்டிக் கொண்டுவருகிறாள் தன் தந்தையிடம். தவறாக எடுத்துக்கொண்ட குருசேவ், அவசரமாகப் போகிறார். அடுத்து வருகிறார் மக்கள் சீனத்து மா மா.)

மா: மாமா நேருவுக்கு மக்கள் சீனத்தின் மாபெரும் வாழ்த்துக்கள். இக்கட்டான காலகட்டத்தில் சந்திக்க நேர்ந்தாலும் இதயம் நிறைந்தவாழ்த்துக்கள்.

நேரு: நல்லது மக்கள்சீனம் பஞ்சசீலத்தை மறந்ததேனோ?

மா: "பஞ்ச"ராய்ப் போன பஞ்சசீலத்தைப்பற்றி என்ன பேச்சு? உங்களுக்குப் பிறந்த நாள் பரிசாக, சீன-இந்திய எல்லையிலே செத்த பிணங்கள் பதினேழையும் தருகிறோம்.

(மா கிளம்புகிறார். தருமன் வருகிறான்.)

தருமன்: கண்ணனுக்குப் பின்னவா! எமைக் காத்தருளும் மன்னவா! குலதிலகா! இனநிபுணா! எங்களை மறக்காமல் இருக்கின்ற நீ நீடு வாழவேண்டும். தசரதன் மனைவியரினும் பல்லாண்டு வாழவேண்டும்.

நேரு: நான் உங்களை என்று மறந்தேன்?

தர்: உன் உலக நூலை எழுதும்போது எமக்கெதிராக இருந்தாய்; ஐதராபாத்தில் பேசுகையில் எம்மைக் கவிழ்த்தினாய். இல்லையா? "மதத்தின் பேராலும் கடவுளின் பேராலும், ஏற்கனவே வேறு எவற்றிற்கும் சிந்தாத அளவு குருதியைச் சிந்தியிருக்கிறோம்! இந்தக் கொடுமைகள் அழிய வேண்டும்!' என்றாயே! நினைவில்லையா? ஐதராபாத் பொதுக் கூட்டத்தில் "நான் கோவில்களுக்குச் செல்வதே இல்லை!" என்றாய்! மதுரைக் கோவிலுக்கு வந்தபோது, 'இது தர்மச் செயலா! விளம்பரக் கருவியா?" என்று கேட்டாய். மதத்தின் பெயரால் குருதி சிந்தினோம் என்று சொல்லி மதத்தின்மேல் உள்ள நம்பிக்கையைக் குலைத்துவிட்டாய்! கோயிலுக்கு வருவதில்லை என்றதன் மூலம் மக்களின்பயத்தைக் கெடுத்தாய்! மூன்றாவது தப்பித் தவறி வருகின்றவனையும், வந்திருந்து தன்னாலானதைச் செய்கின்றவனையும், கெடுத்ததாகும். இவற்றையெல்லாம் கண்டு நம் குலத்தில் இப்படி ஒரு நாத்திகன் பிறந்தானே என்று வருந்தினேன்! அவற்றையெல்லாம் தீர்ப்பனபோல், அண்மையில் நீ திருப்பதி சென்றதும் அங்கு காட்டிய அக்கறையும் அமைந்துவிட்டன. மெத்த நன்றி! மிகுந்த பாராட்டு!

நேரு: அடியேனது நன்றி. என்ன எழுந்துவிட்டீர்கள் அதற்குள்ளாக? பதநீர் என்று ஒது புது பானம் தருகிறோம். குடியுங்கள்; இது அரசினர் பானம்

தரு: (குடித்துவிட்டு) இதற்குப் பதில் பனங்கள்ளையேதந்திருக்கலாம்! (என்றவாறே போகிறார். பின் "மிஸ்டர் மதராஸ்" வருகிறார். ஆகா, அவர் முகத்தில் எத்துணை விசுவாசம்!)

மி. ம.: நாயினும் கடையனாய்-நாளும் அலைபவனாய்த்திரியும் புழுவின் வணக்கம் ஏற்பீர், பிரபு!

நேரு: ஏற்றோம் அடிமையே; நேற்றேன் வரவில்லை? உன் காவடி இன்று வெகு பிரமாதம்!

மி. ம.: தங்கள் தொண்டில் நேற்று நேரம் போனதே தெரியவில்லை. மன்னிக்கவும் அரசே!

நேரு: சரி, மாநில நிர்வாகம் எப்படியிருக்கிறது? மாதம் மூன்று குண்டுமாரி பொழிகின்றீரா?

மி. ம.: பொழிகின்றேன், பிரபோ! நாட்டுப் பிரிவினை கேட்பவர்களை நானும் சுட்டுத் தள்ளுகிறேன் பிரபு.

நேரு: கீழ்.........க் கோகிலவாணி நலமா?

மி. ம.: (முகத்தைச் சுளித்துக் கொண்டு) அப்படித்தான் கேள்விப்பட்டேன்.

நேரு: கருப்பர்களெல்லாம் கோதுமை சாப்பிடுகின்றனரா?

மி. ம.: ஆமாம் அய்யனே!

நேரு: சப்பாத்தி சாப்பிடுகிறார்களா?

மி. ம.: ஆமாம்; சப்பாத்தியைச் சாப்பிட்டுவிட்டு, கள்ளிப்பாலையும் குடித்துவிட்டு ஆனந்தமாகத் தூங்குகிறார்கள், பிரபோ!

நேரு: ஆகா, இதுவன்றோ காது குளிரும் கீதம்! நல்லது அடிமையே; இன்று போய் நாளை வா! அந்தக் கிழம் ஏதாகிலும் சொன்னால், திருப்பரங்குன்றத்தை நினைவுபடுத்து.

மி. ம.: இன்னும் கொஞ்ச நாளில் உங்கள் காலடியில் விழ வைக்கிறேன் பிரபோ, அந்த அடிமையை!

நேரு; நல்லது. இன்னும் ஏன்...

மி. ம.: தமிழநாடென்று பெயர்...

நேரு: என்ன சொன்னாய் மதராசி?

மி. ம.: மாப்கரோஜீ! மாப்கரோஜீ! (என்றவாறே ஓடுகிறார்: அவரை மோதிக்கொண்டு சியாங்கேசேக் வருகிறார்.)

சேக்: நல்ல வழி தெரியட்டும் உனக்கு...

நேரு: என்ன?

சேக்: நானும் உன்னைப்போல் பிணங்களை அடுக்கி அதன்மேல்தான் நடந்து வந்தேன்; முரட்டுப் பிடிவாதத்தோடு வீணே திரிந்தேன்; பிற நாட்டை நம்பிக் கிடந்தேன்! இப்போது என் நிலை? "சேக்"காகிவிட்டதப்பனே! ஒரு காலத்தில் நான்தான் செய்தி. இன்றோ நான் யாருமற்ற அனாதை! பரந்த சீனாவை ஆண்டவன், இன்று பார்மோசாவறகுள் பதுங்கிக் கிடக்கின்றேன். பாரதத்தை ஆளும் உனக்கும் அந்தக் கதி வரவேண்டுமா? ஒண்டுவதற்கென்று ஒரு தீவும் கிடையாதே அப்பனே, உனக்கு. எங்கள் நாட்டிற்கு புத்த தத்துவத்தைத் தந்தது உன் நாடு. கைமாறாக உனக்கு வாழ்க்கைத் தத்துவத்தைத் தருகிறேன். வருங்காலம் உணரும் திறமிருந்தால-வரலாறு படித்த அறிவிருந்தால் திருந்திக்கொள். இன்றேல் செங்கோட்டை உனையழிக்கும் தீக்கோட்டையாகிவிடும்! அப்பனே! அழகனே! நாடோடியே! சமாதான வெண்புறுவே! ஐ. நா. வின் அலங்கார பொம்மையே! காமன்வெல்த்தின் சுந்தரனே! உணர்ந்துகொள்! அன்றேல்... (இந்திரா "தண்ணீர்! தண்ணீர்!" என்றலறுகிறாள். எங்கிருந்தோ வந்த சியாங்கே சேக் எபபடியோ - எங்கேயோ, போகிறார். பிறந்தநாள் கொண்டாட வந்த பெருமகனார், தரையில் கிடக்கிறார்.)

-மா. பாண்டியன்

எங்கும் விற்பனையாகிறது
"முல்லை"
(நவம்பர் இதழ்)
கா. அப்பாதுரையார்—மணிமேகலை துறவு
கண்ணதாசன்—போதனை
விலை அணா 4.
முல்லை :: சென்னை-6.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட் ரோடு, சென்னை-6, தமிழ்நாடு.
தொலைபேசி எண் 83510.